விலை ரூபா: 7.00

# வலம்புரி
Valampurii

பக்கங்கள்:- பதினாறு

சங்கு 05 | வள்ளுவர் ஆண்டு 2035 | கார்த்திகை 11 | வெள்ளிக்கிழமை | (26.11.2004) | தொலைபேசி - 2223378 | ஒலி 343

ராம்கோ MADRAS CEMENTS LTD RAMCO CEMENT
ஆசியாக் கண்டத்தில் சீமெந்து
முதலாம் தரத் தொழிற்சாலையில் இருந்து தயாரிக்கப்பட்டது.

# மாவீரர்தின நிகழ்வுகளில் படையினர் அட்டகாசம்!

## மன்னாரில் 22 பேர் காயம்; வவுனியாவில் 4 பேருக்கு சூடு; பருத்தித்துறையில் முறுகல்

(நமது நிருபர்)

தமிழீழ மாவீரர்தின எழுச்சி நிகழ்வுகளில் அத்துமீறி நுழைந்த படையினர் பொதுமக்களைத் தாக்கியும், சுட்டும் பெரும் அட்டகாசம் விளைவித்துள்ளனர். மன்னார், வவுனியா மற்றும் பருத்தித்துறை பகுதிகளில் படையினருக்கும் பொதுமக்களுக்கும் இடையில் மோதல்களும் முறுகல்களும் இடம்பெற்றுள்ளன. மன்னாரில் பொதுமக்களுக்கும் படையினருக்கும் இடையில் இடம்பெற்ற களேபரத்தில் 22 பேர் காயமடைந்தனர். வவுனியாவில் 4 பொதுமக்கள் படையினரால் சுடப்பட்டனர்.

**மன்னாரில்...**

மன்னார் நகரப் பகுதியில் புலிக்கொடி ஏற்றுவது தொடர்பாக படைத்தரப்புக்கும் பொதுமக்களுக்குமிடையே நேற்று ஏற்பட்ட முறுகல் நிலையை அடுத்து இடம்பெற்ற மோதலில் 22 பேர் காயமடைந்தனர்.

இச் சம்பவத்தின்போது காயமடைந்தவர்களில் 16 பேர் பொதுமக்கள். 5 பேர் படையினர். ஒருவர் விடுதலைப் புலி உறுப்பினர். எனத் தெரிவிக்கப்படுகிறது.

(16 ஆம் பக்கம் பார்க்க)

## புலிப் போராளி சுட்டுக்கொலை

(அம்பாறை)

அக்கரைப்பற்றில் விடுதலைப் புலி உறுப்பினர் ஒருவர் நேற்று மாலை 4 மணியளவில் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

அம்பாறை அக்கரைப்பற்று வீதியில் மோட்டார் சைக்கிளில் அவர் சென்று கொண்டிருந்தபோது மற்றொரு மோட்டார் சைக்கிளில் பின் தொடர்ந்து சென்ற இனந்தெரியாத நபர், அவர் மீது துப்பாக்கிப்பிரயோகம் மேற்கொண்டதாக அக்கரைப்பற்று பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ரி.என்.ஜ. முகாரி தெரிவித்தார்.

அக்கரைப்பற்றைச் சேர்ந்த சாந்தன் எனப்படும் சாமித்தம்பி உமாகாந்தன் என்பவரே சம்பவத்தில் உயிரிழந்தவராவர்.

சூட்டுக்காயத்துக்கு இலக்கான நிலையில் அக்கரைப்பற்று மாவட்ட வைத்திய

(16 ஆம் பக்கம் பார்க்க)

## தமிழ்க் கூட்டமைப்பு எம்.பிக்கள் சபையில் நேற்று ஆர்ப்பாட்டம்

### சபை நடவடிக்கைகள் ஒத்திவைப்பு

(கொழும்பு)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்கள் நேற்று மாலை 4 மணியளவில் பாராளுமன்ற சபை நடுவே நடாத்திய ஆர்ப்பாட்டத்தையடுத்து சபை நடவடிக்கைகள் நாளைவரை ஒத்திவைக்கப்பட்டுள்ளன.

பாராளுமன்றம் சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு கூடவுள்ள தாக சபாநாயகர் டபிள்யு.ஜே.எம். லொக்கு பண்டார தெரிவித்துள்ளார்.

மன்னார் நகரில் பாராளுமன்ற உறுப்

(16 ஆம் பக்கம் பார்க்க)

**இன்று**

⏭ தமிழீழத் தேசியத் தலைவரின் 50 ஆவது அகவையை யொட்டி இன்று விசேட சிறப்பு மலர் வலம்புரியுடன் வெளிவருகிறது.

## தமிழீழத் தேசியத் தலைவர் பிரபாவுக்கு இன்று அகவை 50




தமிழுக்கு கதி கம்பனும் வள்ளுவனும்! தமிழர்களின் விடிவெள்ளி நீ ஒருவன்தான்!

தமிழினத்திற்கு கதி நீ ஒருவன்தான்! தமிழர்கள் தலைவிதியும் உன் கையில்தான்!

தமிழீழ விடுதலையும் உன் தோளில்தான்!

## இராணுவ காடைத்தனங்களுக்கு விரைவில் முடிவுகட்ட வேண்டும்

### சு.ப. தமிழ்ச்செல்வன் கண்காணிப்பு குழுவுக்கு அவசர கடிதம்

(கிளிநொச்சி)

மாவீரர் நாள் நிகழ்வுகளைச் சீர்குலைக்கும் வகையில் வடதமிழீழப் பகுதியில் மக்கள்மீது சிங்கள இராணுவத்தினர் காடைத்தனமான தாக்குதல்களைக் கட்டவிழ்த்துவிட்டுள்ளனர்.

இது தொடர்பாக உடனே தலையிட்டு இராணுவ காடைத்தனங்களுக்கு முடிவுகட்டுமாறு தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் போர்நிறுத்தக் கண்காணிப்பு குழுவுக்கு அவசர கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார் மன்னார், வவுனியா, பேசாலை ஆகிய இடங்களில் மாவீரர் நாள் நிகழ்விடங்களில் அத்துமீறி நுழைந்த இராணுவம் தமிழீழத் தேசியக் கொடியை அறுத்துள்ளது.

மாவீரர் நாள் பதாகைகள், மாவீரர்களின் புகைப்படங்கள், அலங்கார வளைவுகள் ஆகியவற்றை சேதப்படுத்தி அட்டூழியம் செய்தவற்றை தமிழ்ச்செல்வன் தனது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார். இந்தக் காடைத்தனத்தில் ஈடுபட்ட சிறிலங்கா இராணுவத்தினரை உடனே கைதுசெய்ய வேண்டும் என்றும் இதுகுறித்து நோர்வே தூதருக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளதாகவும் தமிழ்ச் செல்வன், கடிதத்தில் கூறியுள்ளார். சிறிலங்கா போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழு இதுவரை இந்த பிரச்சினையில் தலையிடாமல் இருக்கிறது என்றும் வட

(16 ஆம் பக்கம் பார்க்க)

## சமாதான முயற்சிக்கு சாதகமாக தலைவர் பிரபாவின் உரை அமையும்

### மங்கள சமரவீர நம்பிக்கை

(கொழும்பு)

மாவீரர்தின உரையில் தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் வே. பிரபாகரன் சமாதான முன்னெடுப்புகளுக்கு சாதகமான அறிவிப்பை வெளியிடுவார் என அரசாங்கம் எதிர்பார்ப்பதாக அமைச்சரவை பேச்சாளர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

நேற்று அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாட்டில் உரையாற்றும்போது இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

தமிழீழ விடுதலைப் புலிகள் சமாதானப் பேச்சுவார்த்தைக்கு வரவேண்டும் என்பதே அரசாங்கத்தின் எதிர்பார்ப்பாகும்.

ஜனாதிபதி சமாதானப் பேச்சுவார்த்தையை ஆரம்பிப்பதற்கு தயார் எனத் தெரிவித்திருந்தும் விடுதலைப் புலிகள் எவ்வித அறிவிப்பையும் இதுவரை வெளியிடாமல் இருக்கின்றனர். இந்த நிலையில் விடுதலைப் புலிகளின் தலைவரின் உரை

(16 ஆம் பக்கம் பார்க்க)

## நாளை மாவீரர் நாள்

(யாழ்ப்பாணம்)

மாவீரர்தினமான நாளை சனிக்கிழமை மாவீரர்களின் பெற்றோர்கள் கௌரவிக்கப்படவுள்ளனர். தமது பிள்ளைகளின் வித்துடல் விதைக்கப்பட்ட மாவீரர் துயிலும் இல்லங்களுக்குரிய பெற்றோர் அந்தந்த மாவீரர் துயிலும் இல்லங்களுக்கு அண்மையில் வைத்து கௌரவிக்கப்பட்டபின் மாலை துயிலும் இல்லங்களுக்கு அழைத்துச் செல்லப்படவுள்ளனர்.

வலிகாமம் பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள் கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கலாசாலை, தேசிய கல்வியியல் கல்லூரி மற்றும் உரும்பிராய் சைவத் தமிழ் வித்தியாலயம் ஆகியவற்றில் வைத்து கௌரவிக்கப்பட்டபின்னர் மாலை 5 மணிக்கு கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லத்திற்கு அழைத்துச் செல்லப்படுவர்.

இதேபோன்று தென்மராட்சியில் உள்ள மாவீரர்களின் பெற்றோர் கொடிகாமம் திருநாவுக்கரசு வித்தியாலயத்தில் வைத்து கௌரவிக்கப்பட்டபின்னர் கொடிகாமம் துயிலும் இல்லத்திற்கு அழைத்துச் செல்லப்படுவர். வடமராட்சியைச் சேர்ந்தோர் நெல்லியடி மகாவித்தியாலயத்தில் வைத்து கௌரவிக்கப்பட்டபின்னர் எள்ளங்குளம் மாவீரர் துயிலும் இல்லத்திற்கு அழைத்துச் செல்லப்படுவர்.

தீவுப் பகுதியைச் சேர்ந்த மாவீரர்களின் பெற்றோர்கள் வேலணை சரஸ்வதி வித்தியாலயத்தில் கௌரவிக்கப்பட்டு சாட்டி மாவீரர் துயிலும் இல்லத்திற்கு அழைத்துச் செல்லப்படுவர்.

தாயக நேரம் மாலை 5.45 மணிக்கு தலைவர் வே. பிரபாகரனின் மாவீரர்தின உரையைத் தொடர்ந்து 6.05 மணிக்கு மணியொலிக்கப்படும். அவ்வேளை அனைத்து மத வழிபாட்டுத் தலங்களிலும் மணியொலிக்கப்படும். பின்னர் 6.06

(16 ஆம் பக்கம் பார்க்க)

# 4 வருடங்களாக கிடைக்காத ஓய்வூதியம் மஉஆ. குழுவின் உதவியால் கிடைத்தது

(யாழ்ப்பாணம்)

4 வருடங்களுக்கு மேலாக ஓய்வூதியத்தைப் பெற்றுக் கொள்ளமுடியாதிருந்த அரச ஊழியர் ஒருவர் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தலையீட்டால் ஓய்வூதியத்தைப் பெற்றுள்ளார்.

யாழ். போதனா வைத்தியசாலையில் கடமையாற்றிய எஸ். சீவரட்ணம் என்பவரே இவ்வாறு மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தலையீட்டால் ஓய்வூதியத்தைப் பெற்றுவராவார்.

4 வருடங்களுக்கு முன்னர் இந்நபர் ஓய்வூதியக் கொடுப்பனவை பெற்றுக் கொள்ளும் பொருட்டு, விண்ணப்பத்தை அனுப்பியிருந்தார். ஆனால் அவரது விண்ணப்பத்திற்கு சரியான பதில் கிடைக்கவில்லை.

சம்பந்தப்பட்ட நபர் தனது ஓய்வூதியம் தொடர்பாக அத்திணைக்களத்துடன் பல முறை தொடர்பு கொண்ட போதும், எதுவித பிரயோசனமும் கிடைக்கவில்லை.

இதனால் பாதிக்கப்பட்ட இந்நபர் மனித உரிமைகள் ஆணைக் குழுவின் உதவியை நாடினார்.

இதன் பயனாக இவருக்கு ஒரு லட்சத்து 82 ஆயிரம் ரூபா நிலுவைப் பணம் கிடைத்ததுடன், மாதாந்த ஓய்வூதியத் தொகையும் தற்போது கிடைத்து வருகிறது.

இவருக்கான ஓய்வூதியம் தாமதமானதிற்கு இவரது விண்ணப்பத்தில் காணப்பட்ட தவறுகளே காரணம் என ஓய்வூதியத் திணைக்களம் கூறியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (க-19)

# இலஞ்ச ஊழல் ஆணைக் குழுவிற்கு புதிதாக உறுப்பினர் மூவர் நியமனம்

(கொழும்பு)

இலஞ்ச ஊழல் ஆணைக் குழுவின் குற்றச்சாட்டுகளை விசாரணை செய்வதற்கென அரசியலமைப்புச் சபை புதிய தலைவரையும் இரு ஆணையாளர்களையும் புதிதாக நியமனம் செய்துள்ளது.

கடந்த திங்கட்கிழமை இடம் பெற்ற அரசியலமைப்புச் சபைக் கூட்டத்திலேயே இதற்கான தீர்மானம் எடுக்கப்பட்டது.

இதன்படி முன்னாள் மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதி சுமீர் இஸமாயில் தலைவராகவும், முன்னாள் பொலிஸ்மா அதிபர் ரி.அனந்தராஜா மற்றும் மேன்முறையீட்டு நீதிபதி பி.எதுசூரிய ஆகியோர் ஆணையாளர்களாகவும் நியமிக்கப் பட்டுள்ளனர்.

அரசியலமைப்புச் சபைக் கூடடம் சபாநாயகர் டபிள்யூ. ஜே. எம் லொக்குபண்டார தலைமையில் கூடியது. அடுத்த மாதத்துடன் சேவைக்காலம் நிறைவடைவோரின் இடத்திற்கே இவர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை சுதந்திர தேர்தல்கள் ஆணையாளர் பதவிக்கு யார் நியமிக்கப்படுவார் என்ற சர்ச்சைகள் தொடர்ந்தவண்ணமுள்ளன.

மேற்படி பதவிக்கு அரசியலமைப்புச் சபை ஒருவரைச் சிபார்சு செய்திருந்த போதும் இதனை உறுதிப்படுத்துவது ஜனாதிபதியின் கையிலேயே தங்கியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ற-6)

# "இசற்ஸ்கோர்" புள்ளி விபரம் டிசம்பர்-10 இல் வெளியாகும்

(கொழும்பு)

2004 ஆம் ஆண்டு கல்விப் பொதுத் தரா தர உயர்தர பரீட்சையில் தோற்றிய மாணவர்களுக்கு பல்கலைக்கழக அனுமதிக்கான இசற்ஸ் புள்ளி விபரம் அடுத்த மாதம் 10 ஆம் திகதி வெளியிடப்படவுள்ளது.

இந்தப் பட்டியல் தற்போது தயாரிக்கப்பட்டு வருவதாகவும் பல்கலைக்கழக மானியங்களின் ஆணைக்குழுத் தலைவர் ரஞ்சித் மெண்டிஸ் தெரிவித்தார்.


இசற்ஸ் புள்ளிவிபரம் அறிவிக்கப்பட்டவுடன் புதிய மாணவர்களைப் பல்கலைக்கழகங்களில் இணைத்துக் கொள்ளுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாகவும் அவர் கூறினார்.

2004 ஆம் ஆண்டு உயர் தரப் பரீட்சையில் தொற்றி பல்கலைக் கழகத்திற்குத் தெரிவான மாணவர்களில் முதலாவது தொகுதியினர், யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் அனுமதிக்கப்படவுள்ளனர்.

அடுத்த மாதம் 20 ஆம் திகதியளவில் புதிய மாணவர்களை பல்கலைக்கழகங்களில் இணைத்துக் கொள்ள முடியும் எனவும் பல்கலைக்கழகங்கள் மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் நம்பிக்கை தெரிவித்தார். (க-9)







கடந்த ஞாயிற்றுக்கிழமை கனடா உலகத் தமிழர் இயக்கத்தினால் மாவீரர்களின் பெற்றோர்கள் கௌரவிக்கப்பட்டனர் அந் நிகழ்வுக் காட்சிகளைப் படங்களில் காணலாம்.

# சாவகச்சேரி மாணவி இரண்டாமிடம்

தமிழ் மொழித்திறன் எழுத்தாக்க தேசிய மட்டப் போட்டியில் தென்மராட்சிக் கல்வி வலயப் பாடசாலையைச் சேர்ந்த மாணவி இரண்டாம் இடத்தைப் பெற்றுள்ளார்.

இவர் சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலையில் கல்வி பயன்று வரும் மாணவி என்பது குறிப்பிடத்தக்கது. (ப-4)

# இலவச மருத்துவ முகாம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் உள்ள சகல லயன்ஸ் கழகங்களும் இணைத்து நடாத்தும் மாபெரும் இலவச மருத்துவமுகாம் இன்று வெள்ளிக்கிழமை காலை 9.00மணிக்கு யாழ். மத்திய கல்லூரியில் இடம்பெறவுள்ளது.

யாழ். மாவட்டத் தலைவர் லயன்ஸ் க.மு.பத்மநாதனால் நடாத்தப்படவுள்ள இம் மருத்துவ முகாமில் கண் பரிசோதித்து வறுமைக்கோட்டின் கீழ் உள்ளவர்களுக்கு மூக்குக் கண்ணாடிகள் இலவசமாக அன்றைய தினம் வழங்கப்படவுள்ளன. (ற)

# கூரை விரிப்புகள் வழங்கப்படுகின்றன

யாழ். பிரதேச செயலர் பிரிவில் குடிசைகளில் வசித்து வருகின்ற பல்வேறு வறிய குடும்பங்கள் தற்போதைய மழையினால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன.

இவ்வாறு மழையினால் பாதிக்கப்பட்டுள்ள குடும்பங்களுக்கு யு. என். எச். சி. ஆர். நிறு வனத்தினால் கூரை விரிப்புக் கள் வழங்கப் பட்டு வருகின்றன.

யாழ். பிரதேச செயலர் ஊடாக கிராம உத்தியோகத்தர்களின் சிபார்சிற்கு அமைவாக இவை வழங்கப்பட்டு வருக்கின்றமை குறிப்பிடத்தக்கது. (ற-19)

# மாவீரர் வாரம் நவ.21-27

## துப்பாக்கி விடு தூது



துப்பாக்கி ஒரு
தூதுப் பொருளாகி இருப்பது
இந்த நூற்றாண்டின்
அதிசயங்களின் ஒன்று தான்!

இலட்சியம் கொண்ட
இளைஞர்க்ள் கரங்களில்
தவழும் துப்பாக்கி
தமிழீழத்தின் விடுதலைக்கு
வித்திட்ட நிகழ்ச்சி!

இந்தக் கானகத்தின்
மத்தியில் எனது குழந்தையின் மழலை
எனது காதுகளுக்கு எட்டுகின்றது
என்றால்
எனது கரங்களில்
தவழும் துப்பாக்கியை மட்டும்
உனக்குத் தூதனுப்ப
முடியாதா என்ன?

உடலை வருத்தும்
உணர்வுகளை அடக்க இந்தத்
துப்பாக்கியை இறுகப் பற்றிக்
கொள்வேன்!

குழந்தையின் நினைவு
இதயத்தைத்
துளைக்கும் போது
இதனை வருடிக் கொள்வேன்!

அன்னையின் கருணைமுகம்
நினைவினில் தோன்றும் போதெல்லாம்
இந்தத் துப்பாக்கியைத்
தொட்டு வணங்குவேன்!

மனைவி குழந்தை, அன்னை
என்று-எந்த நினைவு எழும்போதெல்லாம்
துப்பாக்கி மட்டுமே
எனக்கு ஆறுதலளிக்கின்றது.

அதனால் தான்
இந்தத் துப்பாக்கியை
உன்னிடம் தூதனுப்பத்
துணிந்தேன்!

அன்பே !
எனது கரங்களில் மட்டுமல்ல
எதிரியின் கரங்களிலும்
துப்பாக்கிதான் இருக்கின்றது

உன்மீது கொண்ட
காதலை விட நான்
தேசத்தின் மீது அதிகம்
காதல் கொண்டிருப்பதனால்
எதிரியின் ஆயுதம்
என் கரங்களில் விரைவில்
தவழும்!
எதிரியின் படை பலம்
பெரிது என்ற போதிலும்
எம் மன பலம்
பெரிதும் என்பதனால்
எமது வெற்றி
உறுதிப்படுத்தப்பட்டுள்ளது!

காலம் என்பது
கனிந்து வரும் தருணத்தில்
எனது விழிகள்
எதிரியை நோக்கியே
திசை திரும்பியிருக்கும்....!

அதுவரை உனது
எதிர்காலக் கனவுகளை
விழிகளில் தேக்கி வைத்திரு!

கனவுகள் நினைவாகும்
சமீபகாலத்தில்
துப்பாக்கி உணர்வுகள்
வெற்றி பெற்றபின்
என் கரம் உன்கரம் பற்றிடும்!

துப்பாக்கி எதிரிகள்
துவண்டோடிப்போன பின்
நாம் இணைவோம்!
அதுவரை என் கரங்களில்
துப்பாக்கி மட்டும் தான்!

அமரர்
கணபதி கணேசன்.

# விவாத அரங்கு - 7

விடயம் : தனியார் கல்வி நிறுவனங்கள
மாணவர்களின் கல்வியை
சீரபடுத்துகின்றனவா
சீரழிக்கின்றனவா

உங்கள் வாதங்களை எழுதி அனுப்பி
அனுப்பவேண்டிய முகவரி:-
விவாத அரங்கு, வலம்புரி,
இல.15, வெள்ளாந்தெரு,
யாழ்ப்பாணம்.

## இன்று ஒரு தகவல்

# ராகங்கள்

ராகங்கள் "பாடப்பாட ராகம்" என்று ஒரு பழமொழி உண்டு."பாடப்பாட வேகம்" என்று ஒரு புதுமொழி சொல்லலாம். அதாவது ஒருவர் பாடப்பாட இன்னொருவருக்கு ஓடவேண்டுமென்ற வேகம் அதிகமாகிக் கொண்டே இருக்கும். அதுதான் பாடப்பாட வேகம்.

சங்கீதத்தில் 'சங்கதிகள்' உண்டு. சங்கீதத்தைப் பற்றிய சங்கதிகளும் நிறைய உண்டு. ஸரிகமபதநி என்ற ஏழு ஸ்வரத்தில் எத்தனையோ ராகங்கள்.எந்த ராகத்ததை எப்போது பாட வேண்டும்? எந்தப் பாட்டை எந்த ராகத்தில் பாட வேண்டும் என்று கூட சில வழிமுறைகளை வகுத்து வைத்திருக்கின்றனர்.

இடத்திற்குத் தகுந்த ராகம் உண்டு. செய்யுளுக்கு தகுந்த ராகம் உண்டு. குணத்திற்குத் தகுந்த ராகம் உண்டு.காலத்திற்கு தகுந்த ராகம் உண்டு.

இடத்திற்குத் தகுந்த ராகம் என்று சொன்னேன் அல்லவா? அது ஐந்திணை ராகம் குறிஞ்சி, பாலை, முல்லை, நெய்தல், மருதம் என்ற ஐந்து வகை நிலங்களுக்கும் பொருத்தமான பாடல் இருக்கிறது. குறிஞ்சி, பாலை, சாதாரி, செவ்வழி, மருதம் என்பவை அவை.

செய்யுளுக்குத் தகுந்த ராகம் என்று சொன்னேனே அது என்ன தெரியுமா? வெண்பாவுக்கு சங்கராபரணம், ஆசிரியப்பாவுக்கு தோடி, கலிப்பாவுக்கு பந்துவராளி, கலித்துறைக்கு பைரவி, தமிழிசைக்கு தோடி, விருத்தப்பாவுக்கு கல்யாணி, காம்போதி, மத்தியமாவதி , உலாச் செய்யுளுக்கு சௌராஷ்டிரம், பிள்ளைத்தமிழுக்கு கேகதாரகௌளம், பரணிக்கு கண்டாரவம்.

குணத்திற்குத் தகுந்த ராகம் என்று சொன்னேனே இரக்கத்திற்கு நீலாம்பரி, புன்னாகவராளி, ஆகரி, கண்டாரவம், பியாகடம். துக்கத்திற்கு இதே இரக்க ராகங்கள். அத்தோடு வராளியையும் சேர்த்துக் கொள்ளலாம். மகிழ்ச்சிக்கு காமபோதி, சாவேரி, தன்யாஸி. யுத்தராகம் நாட்டை.

காலத்திற்குத் தகுந்த ராகம் என்று சொன்னேனே. வசந்தகால ராகங்கள்- வசந்தா, காம்போதி, அசாவேரி, தன்யாசி. மாலை வேளை ராகம் கல்யாணி, காபி, கன்னடம், காம்போதி. சாமவேளை ராகம் ஆகரி. விடியற்காலை ராகம் இந்தோளம், நாட்டை, பூபாளம். உச்சிவேளை ராகம் சாரங்கம,தேசாட்சரி. எல்லாக் காலத்திற்கும் பொதுவான ராகங்களும் உண்டு. அதாவது ஆகரி, இந்தோளம், இராமகலி, சாரங்கம்,பூபாளம் போன்றவை நீங்கலாக மற்றைய ராகங்கள் எல்லாக் காலத்திற்கும் பொருந்தும்.

இன்னொரு விஷயம்தெரியுமா? ராகங்களிலேயே ஆண்ராகம், பெண்ராகம் எல்லாம் உண்டு. ஒருவனுக்கு ஒருத்தி என்ற கட்டுப்பாடெல்லாம் அவற்றிற்கில்லை.

உதாரணத்திற்கு பைரவியை எடுத்துக் கொள்ளுங்கள் இது ஆண்ராகம தேவக்ரியை, மேகவிரஞ்சி, குறிஞ்சி போன்றன பெண்ராகங்கள். இவை பைரவியின் மனைவிகள். இந்த ராகங்களுக்கு அதிதேவதை ஈசன். சீராகம் என்பது ஆண்ராகம் இந்தோளம். பல்லதி, சாவேரி போன்றவை அதன் மனைவிகள். இவற்றிற்கு அதிதேவதை சரஸ்வதி இப்படி நிறையத் தம்பதிகள் உள்ளனர்.

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## மருதங்கேணியில் வெள்ளம்

(மருதங்கேணி)

மருதங்கேணி பிரதேசத்தில் இப்போது பெய்து வரும் மழை காரணமாக அன்றாட செயற்பாடுகள் ஸ்தம்பித்துள்ளன.

ஆழியவளைக்கு அப்பால் போக்குவரத்து செய்ய முடியாத நிலையில் வெள்ளம் கடலில் பாய்ந்து கொண்டிருக்கிறது. கடற்கரையோர குடியிருப்புக்களில் வெள்ளம் புகுந்துள்ளது. இதனால் மக்கள் வீடுகளில் தங்க முடியாத நிலை உருவாகியுள்ளது.

தொடர்ந்து மழை பெய்யுமானால் வீடுகளில் இருந்து மக்கள் இடம்பெயர வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

உலக உணவுத்திட்டத்தின் கீழ் களிமண்ணினால் போடப்பட்ட மாமுளவு, கட்டைக்காடு வீதி வெள்ளத்தினால் அடித்துச் செல்லப்பட்டுள்ளது. இதனால் போக்குவரத்து செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

வெற்றிலைக்கேணி றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலை, வெற்றிலைக்கேணி பரமேஸ்வரா வித்தியாலயம், கட்டைக்காடு தமிழ் கலவன் பாடசாலை, கேவில அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை போன்றவற்றில் கற்றல் செயற்பாடுகள் ஸ்தம்பித்துள்ளன. (ப-35)

# மாவீரர்களின் இலட்சியக் கனவை நாம் நிச்சயம் நிறைவேற்றுவோம்

## கேணல் பால்ராஜ் உறுதி

(திருகோணமலை)

எந்த இலட்சியத்திற்காக இத்தனை ஆயிரம் மாவீரர்கள் தம்மை அர்ப்பணித்தார்களோ அதனை நிச்சயம நிறைவேற்றியே தீருவோம்.

அதனை அடைவதற்காகவே சமாதான நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகிறோம் என கேணல் பால்ராஜ் தெரிவித்துள்ளார்.

திருகோணமலை மூதூார் கிழக்கில் உள்ள சேனையூர் மத்திய கல்லூரியில் நேற்று முன்தினம் நடைபெற்ற மாவீரர்களின் பெற்றோர் கௌரவிப்பு நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

விடுதலை புலிகளின் திருகோணமலை மாவட்ட மகளிர் பொறுப்பாளர் காருண்யா தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், திருகோணமலை மாவட்ட கட்டளைத் தளபதி கேணல சொர்ணமும் கலந்துகொண்டார்.

தமிழீழத் தேசிய எழுச்சிப் பேரவைப் பொறுப்பாளர் சஞ்சய், திருமலை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.எழிலன் உட்பட பல முக்கிய தளபதிகளும் இந்நிகழ்வில் கலந்துகொண்டு சிறப்புரையாற்றினர்.

சுமார் 300ற்கும் அதிகமான மாவீரர் களின் பெற்றோர்கள் இந்நிகழ்வில் கௌரவிக்கப்பட்டனர்.

அங்கு கேணல் பால்ராஜ் மேலும் உரையாற்றுகையில,

நாங்கள் சமாதான வழியில் இனப் பிரச்சினைக்குத் தீர்வுகாண முயல்கின்றோம். அதற்கும அப்பால் எங்கள் மீது போர் திணிக்கப்பட்டால் அதனை நாங்கள் எதிர்கொள்ளத் தயாராகவே இருக்கின்றோம்.

அதற்கேற்ற வகையில் தலைவர் எங்களை ஒழுங்கமைத்து வழிநடாத்தியுள்ளார். எமது தலைவரின் கட்டளையை ஏற்று அதன்படி எந்தவொரு செயலையும் செய்வதற்குத் தயராகவே இருக்கின்றோம்.

இந்தச் சமாதான காலத்தில் எமக்கு ஏற்பட்ட இழப்புக்களை தலைவர் பொறுமையுடன் அவதானித்து வருகிறார் எனவும் தெரிவித்தார். (ரு-4)

# வட-கிழக்கில் மீண்டும் யுத்தத்தை ஏற்படுத்த இராணுவத்தினர் முயற்சிசெய்து வருகின்றனர்

## நாடாளுமன்றில் கிஷோர் எம்.பி குற்றச்சாட்டு

(கொழும்பு)

பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கான பாரிய நிதி ஒதுக்கீடுகளுக்கு மத்தியில் தமிழ்மக்கள் தமக்கான இறுதித் தீர்மானத்தை எடுக்க வேண்டிய கட்டாயத்துக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.இதன் முடிவு தமிழீழமாகவே இருக்கும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சிவநாதன் கிஷோர் தெரிவிததுள்ளார்.

கடநத செவ்வாய்க்கிழமை பாராளுமன்றக் கூட்டத்தில் உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

இம்முறை வரவு-செலவுத் திட்டத்தில் பாதுகாப்பு செலவீனத்திற்கென பாரியளவு நிதி ஒதுக்கப்பட்டுள்ள நிலையில் வடக்கு-கிழக்கில் யுத்தம் ஒன்றிற்கான ஏற்பாடுகளில் இராணுவம் ஈடுபட்டு வருகின்றது. அத்துடன் அவர்கள் கண்ணிவெடிகளைப் புதைகக்கும் நடவடிக்கைகளிலும் ஈடுபட்டு வருகின்றனர்.

வடக்கு-கிழக்கில் இராணுவ நடவடிக்கைகள் காரணமாக சுமார் 45 ஆயிரம் பெண்கள் கணவன்மார்களை இழந்துள்ளனர்.

சுமார் 30 ஆயிரம் குடும்பங்கள் படைத்தரப்பின அதிஉயர் பாதுகாப்பு வலயம் காரணமாக பாதிக்கப்பட்டுள்ளன.

வடக்கு- கிழக்கில பல தொழிற சாலைகள் இருக்கின்ற போதும் அவற்றை உரியமுறையில் இயக்குவதற்கு வரவு-செலவுத் திட்டத்தில் போதிய நிதி ஒதுக்கப்படவில்லை.

இப் பிரச்சினைகளுக்கு வடக்கு-கிழக்கில் விடுதலைப் புலிகளின் இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை வரைபின் அடிப்படையில் தீர்வு ஒன்று காணப்படுவது அவசியமாகும்.

இல்லையேல் யுத்தமொனறு ஏற்படுவதை எவ்விதத்திலும் தவிர்க்க முடியாத நிலை போய்விடும். அதன் மூலம் ஐக்கிய நாடுகள் சபை ஏற்றுக் கொள்ளக கூடிய தமிழீழம் ஒன்று உருவாவதை எவராலும தடுக்க முடியாமல் போயவிடும் என்று அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார். (ப-4)

## இராசி பலன்

**26.11.2004**

**(கார்த்திகை 11, வெள்ளிக்கிழமை)**

**பூரணை பின்னிரவு 01.33 மணிவரை**

**கார்த்திகை நள்ளிரவு 12.07 மணிவரை**

**இராகுகாலம் 10.42- 12.12 மணிவரை**

**சுபநேரம் 6.12 - 7.42 மணிவரை**

**திருக்கார்த்திகை விரதம், பூரணை விரதம்**

**சர்வாலய தீபம், குமராலய தீபம்**

**மேடம்** *இனிய அனுபவம், அந்நியர் சந்திப்பு, வாக்குமேன்மை, புதிய பொருள்சேர்க்கை*

**இடபம்** *கௌரவக்குறைவு, எடுத்த கருமங்கள் தாமதமாகும், மாதர்நட்பு, கோபப்படுதல்.*

**மிதுனம்** *நல்ல முயற்சி, ஆழ்ந்த சிந்தை, சயன சுகம், பெரியோர் சந்திப்பு.*

**கடகம்** *பிதா சிந்தை, காரிய இடையூறு, பிரயாணம், குறைந்த வருமானம்.*

**சிங்கம்** *நல்ல காரியம், களஸ்திர நன்மை, பெருமையடைதல், நல்ல செய்தி.*

**கன்னி** *சுப நிகழ்ச்சி, தொழிலில் ஆர்வம், நண்பர்கள் உதவி, பணவருவாய்.*

**துலாம்** *ஆன்றோர் மதிப்பு, அச்சமான நிலை, உடல்நலக்குறைவு, கட்டுப்பாடு.*

**விருச்சிகம்** *ஆரோக்கியக் குறைவு, வீண் தொல்லை, காரியதடங்கல், வாகன பயம்.*

**தனுசு** *ஆர்வ சந்திப்பு, நல்ல வருமானம், திடீர் பயணம், பெருமையடைதல்.*

**மகரம்** *சுகவாழ்வு, தடைப்பட்ட காரியம் கைகூடும், தொழில்நன்மை, பணவருவாய்.*

**கும்பம்** *முயற்சி தாமதம், பதற்றநிலை, ஆரோக்கியக்குறைவு, தனவிரயம்.*

**மீனம்** *வீண் சம்பாசனை, அதிக முயற்சி, நண்பர்கள் சந்திப்பு, தனவிரயம்.*

**பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது**

— வளவன்

## முன்பள்ளி மாணவர்களுக்கு இலவச சீருடைத்துணி வழங்கல்

(யாழ்ப்பாணம்)

மாவீரர் தினத்தை முன்னிட்டு வலிகாமம் பனை தென்னை வள அபிருவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணி முன்பள்ளி மாணவர்களுக்கு இலவச சீருடைத்துணியை வழங்கி வருகின்றது.

இதற்கமைய, அதன் அங்கத்துவ சங்கங்களான சங்கானை, தெல்லிப்பழை, சுன்னாகம், மானிப்பாய், பண்டத்தரிப்பு, கோண்டாவில் மறறும் காரைநகர் ஆகிய பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் ஆதரவில இயங்குகின்ற முன்பள்ளிகளின் மாணவர்களுக்கு இலவச சீருடைத துணியும், ஆசிரியர்களுக்கு சேலைகளும் வழங்கப்பட்டுள்ளன.

இதனால், 78 முன்பள்ளிகளைச் சேர்ந்த 2 ஆயிரத்து 509 மாணவா களும, 125 ஆசிரியாகளும் பயனடைந்துள்ளமை குறிபபிடத்தக்கது. (ற)

## தரமற்ற மாவில் பாண்!

(கோண்டாவில்)

கலவியங்காடு இராசபாதை பகுதிகளில் உள்ள கடைகளுக்கு வழங்கப்படும் பாண் தரங்குறைந்ததாகவும் நிறைகுறைந்ததாகவும் பார்ப்பதற்கு அசிங்கமான தோற்றத்தைக் கொண்டதாகவும் இருப்பதாக அவ்வூர் வாசிகள் தெரிவிக்கின்றனர். இதுபற்றி கடைக்காரர்களிடம் தெரியப்படுத்திய போது அவர்கள் இது பேக்கரிகளுக்கு வழங்கப்படும் முதலாம் தர மாவில் உருவாக்கப்படடது என பேக்கரிக் காரர்கள் தெரியப்படுத்தியதாகத் தெரிவிக்கினறனர். இந்த மா பாவனைக்கு உதவாது எனத் தெரியவருகின்றது.

இம்மா மாடு,ஆடு,கோழிகளுக்கு தீனி செய்வதற்கே ஏற்றது என பாவனையாளர்கள் தரப்பில் தெரிவிக்கப்படுகிறது.

மனித தேவைக்கு பயன்படமுடியாத இந்த மா வகையை கொள்ளை இலாபம் பெறுவதற்கே பேக்கரிக்காரர்கள் பயன்படுத்துகிறார்கள். இந்த விடயத்தில் உயர் அதிகாரிகள் அக்கறையுடன விரைந்து செயல்பட்டால் இப்படிப்பட்ட சம்பவங்களைத் தடுக்க முடியும் எனச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ப-130)

# தீபங்கள் ஏற்றும் திருக்கார்த்திகையில் பாவ இருளகல ஈசனைப் பணிவோம்

கார்த்திகை மாதம் என்ற வுடனேயே ஒம் எல்லோர் மன திலும் ஞாபகத்திற்கு வருவது திருக்கார்த்திகை விளக் கீடே. நாம் எந்தவொரு விழா வையும் ந'.ாத் துவதாயினும் முதலில் மங்களவிளக்கேற்றி ஆரம்பிப்பதே வழமையான தும் சிறப்பானதுமாகும். தீபச் சுடர் ஏற்றுவதானது மக்கள் தம் மனதிலும் நல்லொளிச் சுடர் விட்டுப் பிரகாசிக்கவும் உலகில் துன்ப இருள் அகன்று ஒளி வீசவும் வேண்டும் என்பத னைக் கருத்தில் கொண்டே யாகும்.


மாதம் தோறும் வரும் கார்த்திகை நட்சத்திரம் முருகப் பெருமானுக்குரிய சிறப்பு வழிபாட்டு நாளாகும். கார்த்திகை மாதத்துக்கு கார்த்திகை நட்சத்திர நாள் தனிச் சிறப்புடைய தீபத் திருநாளாகக் கொண்டாடப்படுகின்றது.

திருக்கார்த்திகைத் தீபத் திருநாளாகக் கொண்டாடப் படும் நன்நாளின் சிறப்பினை திருச்செந்தூர்ப் புராணம்

**சிறந்த கார்த்திகை கார்த்திகைத் தீபத்தா**
**நிறைந்தவாறு நிலாமுக மண்டலம்**
**பிறந்துசா முன்னொருதரம் பெட்புற**
**உறைந்து போற்று நகர்க் கோர் பிறப்பில்லையே**

என அழகாக எடுத்துக் கூறு கின்றது.

சிறப்பிற்குரிய திருக் கார்த்திகைத் தீப நன்நாளில் மக்கள் ஆலயங்கள், வீடுகள் மற்றும் தொழில் ஸ்தலங் கள் போன்ற அனைத்து இடங் களிலும் தீபங்கள் ஏற்றி மகிழ்வார்கள். முருகப் பெருமானுக்கு விசேடமாக இத் திருநாள் கொண்டாடப் படினும் மற்றைய எல்லாத் தெய்வங்



களின் ஆலயங்களிலும் இந் நாள் தீபமேற்றி விளக்கீட் டுத் திருநாளாக மக்களால் கொண்டாடப்படுகின்றது.

லம் யிரங்கிய இறைவன் திருக்கார்த்திகை நாளிலே திருவண்ணா மலையிலே அந்த ஜோதி வடிவைக் காட்டியருளி னார் எனவும் முப்புரங்களை எரித்த இறைவன் மும்மல இருள் அகலவும் எங்கும் தூய ஒளி

## வெள்ளிநற்சிந்தனை

கார்த்திகைத் தீபத் திரு நாளைப்பற்றி நம் பெரியோர் கள் புராணங்களிலும் சிறப் புற எடுத்துக் கூறியுள்ளனர். சிவபெருமான் சிவராத்திரி நாளிலே பிரம்மாவிற்கும், விஷ்ணு விற்கும் தமது சோதிப் பெரு வடிவைக் காட்டிய போது தேவர் கள் அவ் ஒளி வடிவத்தை மீண் டும் தாம் கண்டு தரிசிக்க வேண் டும் என இறைவனிடம் வேண்டு தல் செய்தனர். அவர்களின் வேண்டுகோளுக்குத் திருவு

பரவவும் வேண்டிப் புன்னகை புரிந்த நல் ஒளியே தீபத் திரு நாளாக திருக்கார்த்திகையெனக் கொண்டாடப்படுவதாகவும் கூறப்படுகின்றது.

திருமூல நாயனாரும் திரு மந்திரத்திலே சிறப்பாக

**விளக்கினை ஏற்றி வெளியை அறிமின்**
**விளக்கின் முன்னே வேதனை மாறும்**
**விளக்கை விளக்கும் விளக் குடையார்கள்**
**விளக்கில் விளங்கும் விளக் கவர் தாமே**

என விளக்கீட்டின் தத்து வத்தைத் தெளிவாக எடுத் துக் கூறியுள்ளார்.

எனவேதான் கார்த்திகைத் தீப நன்நாளில் எங்கும் ஒளி விளக்குகள் ஏற்றியும் இறை வழிபாடுகள் செய்து விழாக் கள் நடாத்தியும், மக்கள் சர்வாலய தீபத் திருநாளாக இந்நாளைப் போற்றிக் கொண் டாடுகிறார்கள்.

மேலும் இந் நாளிலே ஆலய முகப்புக்களில் எல்லாம் சொக் கப்பானை எனப் பெரிதாகக் கொழுத்திப் பெரும் தீச்சு வாளை ஒளி உண்டாக்கியும் வழிபடுகின்றனர்.

திருஞானசம்பந்தப் பெரு மானும் திருக்கார்த்திகை விளக்கீடு கண்டு வழிபாடு செய்யும் சிறப்பைப் பின்வருமாறு

**''வளைக்கை மடநல்லார் மாமயில் வண்மறுகில்**
**துளக்கில் கபாலீச் சரத் தான் தொல் கார்த்திகை நாள்**
**தளத்தேந்தின முலையார் தையலார் கொண்டாடும்**
**வ''ளக் க''டுகாணாது போதியோ பு'ம்பாவாய்''**

## நீர்வை மணி

எனவரும் தேவாரப் பதிகம் மூலம் எடுத்துக் காட்டியுள் ளார். எனவே உலகெங்கும் பீடித்துள்ள அஞ்ஞான இருள் அகன்று மெய்ஞ்ஞான ஒளி பரவி மக்கள் இறையுணர்வுடன் நல்வாழ்வு வாழ்ந்திட வேண் டித் தீபத் திருநாளாம் திருக் கார்த்திகைத் திருநாளிலே எங்கும் தீபச் சுடரினை ஏற்றித் தெய்வம் தொழுது நல்வாழ்வு காண்போமாக.

## பயிற்சி நெறி

(யாழ்ப்பாணம்)

உலக வங்கியின் நிதியுத வியுடன் கலைப்பீடம் மற்றும் முகாமைத்துவ பீட இறுதி வருட மாணவர்களுக்கு ஆங்கிலம் மற்றும் தகவல் தொழில்நுட்பப் பயிற்சிகள் வழங்கப்படவுள்ளன.

எதிர்வரும் டிசம்பர் மற்றும் ஜனவரி மாதங்களில் இப் பயிற்சி நெறி ஆரம்பமாகவுள்ளது. மேற் படி பயிற்சி நெறியில் பங்கு பற்ற வுள்ள மாணவர்கள் சுயவிபரக் கோவையைத் தயாரித்து பரீட் சைக் கிளைப் பதிவாளரிடம் எதிர் வரும் 30 ஆம் திகதிக்கு முன்னர் ஒப்படைக்குமாறு சிரேஷ்ட பரீட்சைக்கிளைப் பதிவாளர் கேட் டுள்ளார். (ற-5)

## வகுப்புகள்

பாசையூர்ப் பகுதி பல்கலைக் கழக மாணவர் ஒன்றியத்தினால் சென் அன்ரனிஸ் பாடசாலை யில் ஞாயிறு தவிர்ந்த ஏனைய நாட்களில் இரவுநேர வகுப்புக்கள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன.

தரம்-6 தொடக்கம் உயர் வகுப்பு மாணவர்கள் வரை இதன் மூலம் பயன்பெற்று வருகின்றனர்.(ப-51)

## கௌரவிப்பு

யாழ்.மாவட்ட அபிவிருத் திக் கூட்டுறவுச் சங்கத்தின் ஏற் பாட்டில் மாவீரர்களின் பெற் றோர்கள் கௌரவிக்கப்பட்டனர்.

சங்கத்தின் பொது முகா மையாளர் யோகராசா தலைமை யில் நேற்று முன்தினம் பால் வினையோகஸ்தர் மன்றத்தில் மாவீரர்களின் பெற்றோர்கள் கௌரவிக்கப்பட்டனர்.

இந் நிகழ்வில் தமிழ் ஈழ விடுதலைப்புலிகளின் கூட்டுறவுப் பொறுப்பாளர் பொ.புஸ்பனும் கூட் டுறவுச் சங்கப் பணிப்பாளர்களும் கலந்து கொண்டார்கள்.(ப-130)

## மீட்பு நிதி மீளப்பெற திகதி அறிவிக்கப்படும்

(சாவகச்சேரி)

யாழ்.மாவட்டத்தில் இடம் பெற்ற கர்த்தால் காரணமாக பளைக்குச் சென்று கடந்த 20 ஆம் திகதி மீட்பு நிதியினை மீளப்பெறமுடியாதவர்கள் தமக் குரிய மீட்புநிதியை மீளப்பெறு வதற்கான திகதி வெகுவிரை வில் அறிவிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ப-29)

## டிசம்பர் - 1 இல் எரிக் இலண்டன் பயணம்

# பாலாவைச் சந்தித்த பின்னர் 7ஆம் திகதி இலங்கை வருகை

(கொழும்பு)

நோர்வேயின் விசேட சமா தானத் தூதுவர் எரிக்சொல் ஹெய்ம் அடுத்த மாதம் 7ஆம் திகதியளவில் இலங்கைக்கு விஜயம் மேற்கொள்ளவுள்ளார்.

தடைப்பட்டுப் போயுள்ள சமாதான முயற்சிகளை மீள ஆரம்பிப்பது குறித்து இரு தரப் புடனும் கலந்தாலோசித்து மீண்டும் பேச்சுவார்த்தையை ஆரம்பிக்கும் முக்கிய நோக்குட னேயே அவரின் இவ் விஜயம் அமையவுள்ளது.

நோர்வேயின் விசேட சமா தானத் தூதுவர் எரிக்சொல் ஹெய்ம் கடந்த மூன்று வாரங் களுக்கு முன்னர் இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டிருந்தார்.

நோர்வே வெளிவிவகார அமைச்சர் ஜோன் பீற்றர்ஸனு டன் கடந்த முறை இங்கு விஜ யம் மேற்கொண்ட எரிக்சொல் ஹெய்ம்,. ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, அரச தரப்புப் பிரதி நிதிகள், விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் ஆகி யோரைச் சந்திந்து சமாதானப் பேச்சுவாத்தையை மீண்டும் ஆரம்பிப்பது தொடர்பாக விரி வாகப் பேச்சுவார்த்தை நடாத் தியிருந்தார்.

இதேவேளை, விடுதலைப் புலிகளின் இறுதி நிலைப்பாடு குறித்துத் தெளிவாக அறிந்து கொள்வதற்காக அடுத்த மாதம் முதலாம் திகதி லண்டன் செல் லவுள்ள எரிக்சொல்ஹெய்ம் அங்கு விடுதலைப்புலிகளின் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கத்தைச் சந் தித்துப் பேச்சுவார்த்தை நடாத்தவுள்ளார்.

அன்ரன் பாலசிங்கத்துட னான சந்திப்பை முடித்துக் கொண்டு 7ஆம் திகதி அவர் இலங்கைக்கு விஜயம் செய்ய வுள்ளார்.

இம்முறை இலங்கை விஜ யத்தின் போது, அரசு தரப்புப் பிரதிநிதிகளோடும், ஜனாதிபதி யோடும் சந்திப்புக்களை நடாத் தவுள்ள எரிக்சொல்ஹெய்ம், அரசாங்கத்தின் தீர்மானங் களை விடுதலைப்புலிகளுக்கு அறிவிப்பதற்காக கிளிநொச் சிக்கும் செல்லவுள்ளார்.

விடுதலைப்புலிகளால் முன்வைக்கப்பட்டுள்ள இடைக் கால நிர்வாகசபை யோசனைக்கு மாற்றீடாக, இலங்கை அரசு தயாரித்துள்ள யோசனையை எரிக்சொல்ஹெய்ம் ஊடாக விடுதலைப் புலிகளிடம் அனுப்பி வைக்க அரசாங்கம் திட்டமிட் டிருப்பதாகத் தெரியவருகி றது. (ற-4)

# குறைந்த வட்டியில் வீட்டுக் கடன்

(கொழும்பு)

ஊழியர் சேமலாப நிதியத் தில் அங்கம் வகிக்கின்ற அனை வருக்கும் அவரவர் சேமலாப நிதியின் 75 வீதத்தை வீட்டுக் கடனாக வழங்குவதற்கு அர சாங்கம் தீர்மானித்துள்ளதாக தொழிலமைச்சர் அதாவுட செனவிரத்ன தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க நேற்று முன் தினம் பாராளுமன்றத்தில் எழுப்பிய கேள்வியொன்றுக் குப் பதிலளிக்கையிலேயே அமைச்சர் இதனைத் தெரிவித் தார்.

இக்கடன் தொகை 4.5 வீத வட்டி அடிப்படையில் வழங்கப் படவுள்ளது, அரச வங்கியின் ஊடாக இக்கடன் தொகை ஊழியர்களுக்குப் பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுக் கப்படும் என அமைச்சர் இது குறித்து மேலும் விளக்கமளித் துள்ளார். (ற-4)

## பாடல் இயற்றும் போட்டி முடிவுகள்

(கொழும்புத்துறை)

தேசிய கரித்தாஸ் செடக் நிறுவனத்தின் நீதி சமாதானக் குழுவினரால் சிறுவர் உரிமை களை மையமாக வைத்துப் பாடல் இயற்றும் போட்டிகள் யாழ்.மாவட்டத்தில் நடாத்தப் பட்டன.

இதில் மருதனார்மடம் இராம நாதன் கல்லூரி தரம்-10 மாணவி சிவராணி - சிவராஜன் முதல் இடத்தையும் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த அன்ரனி அபீர்ராஜன் இரண்டாமிடத்தையும் ஆனைக் கோட்டை றோ.க.த.க.பாட சாலை ஆசிரியை சத்தியதாச மூன்றாமிடத்தையும் பெற்றுக் கொண்டனர். (ப-51)

# கைதடியில் மாவீரர்களின் பெற்றோர்கள் கௌரவிப்பு

(சாவகச்சேரி)

கைதடி தேசிய எழுச்சிப் பேரவையின் ஏற்பாட்டில் மாவீரர் களின் பெற்றோரைக் கௌரவிக் கும் நிகழ்வு கடந்த 19 ஆம் திகதி இடம்பெற்றது.

இதில் தமிழ் ஈழத்தேசியக் கொடியினை தென்மராட்சி அர சியல்துறைப் பொறுப்பாளர் கலை வாணன் ஏற்றி வைத்தார்.

தொடர்ந்து மாவீரர்களது பெற்றோர் மங்கள வாத்தியத் துடன் கைதடி விக்னேஸ்வரா வித்தியாலயத்திற்கு அழைத் துச் செல்லப்பட்டுக் கௌரவிக் கப்பட்டனர்.

இந் நிகழ்வில் யாழ்.மாவட்ட துணை அரசியல் துறைப்பொறுப் பாளர் செம்மணன், யாழ்.மாவட்ட கல்விக்கழகப் பொறுப்பாளர் ஆர்வலன் உட்படப் பலர் மாவீரர்களது பெற்றோரைக் கௌரவித்து உரை நிகழ்த்தி னர். (ப-29)

# வேதாகம டிப்ளோமாவிற்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன

(கொம்புத்துறை)


2005 ஆம் ஆண்டிற்கான வேதாகம டிப்ளோமா கற்றல் வகுப்புக்களிற்கான விண்ணப் பங்கள் கோரப்பட்டுள்ளன.

ஜனவரி மாதம் 8 ஆம் திகதி முதல் வகுப்புக்கள் பிரதி சனிக் கிழமை தோறும் காலை 9.30 தொடக்கம் பிற்பகல் 1.45 வரை மறைக்கல்வி நிலையத்தில் நடைபெறும்.

விண்ணப்பங்களை அனுப்பு வோர் அடுத்தமாதம் 31 ஆம் திகதிக்கு முன்னர் பங்குக் குரு வானவரின் சிபார்சுடன் ஆயர் இல்லத்தில் உள்ள பொது நிலையினர் ஆணைக்குழுவிற்கு அனுப்பிவைக்குமாறு அதன் செயலாளர் பொ.பிரான்சிஸ் தெரிவித்துள்ளார். (ப-51)

# தமிழீழத் தேசியத் தலைவர்

## மேதகு வேலுப்பிள்ளை பிரபாகரன்




## எம் இனிய வாழ்த்துக்கள்

# தேசியத் தலைவரின் 50 ஆவது அகவை வாழ்த்து மலர்

## உதயத்து ஒளியாய்

உறங்கிய தமிழை விழித்திட வைத்து
உலகம் போற்றும் உத்தமன் ஆனாய்
தமிழினை அழித்த எதிரியை வீழ்த்தி
தன்நிகர் இல்லாத் தலைவனும் ஆனாய்
உலகில் தலைவர் ஆயிரம் உண்டு
உன்போல் உலகினில் ஒருவர் உண்டோ
உயிரைக் கொடுத்தும் உம்மைக் காப்போம்
உதயத்தின் ஒளியினை உன்னால் காண்போம்.

*ஏ.விஜயன் (பாசையூர்)*

## தமிழர் தேசத்து வேந்தன் வாழி!

பொங்கும் தமிழர் இன்னல்கண்டு
புவியாய் எழுந்த வேந்தன் வாழி
எங்கள் தேசம் எம்மைச் சேர
எழுச்சியோடு எழுந்த் வேந்தன் வாழி
தங்கத் தலைவனாய் தமிழர் தெய்வமாய்
தாயகம் காக்க எழுந்த வேந்தன் வாழி
மங்கா தமிழர் ஆட்சியை மண்ணில் காக்க
மாண்புகள் சேர்த்த எங்கள் தலைவன் வாழி.

*மதுரகவி.காரை.எம்.பி.அருளானந்தன்.*

## மன்னவனே நீ வாழ்க

உன்பிறந்த நன்நாளில்
உலகம் மகிழ்கிறது
மன்னவனே நீ வாழ
மனதார வாழ்த்துகிறேன்!

பொங்கு தமிழினத்தின்
பொற்குடமே மிதனில்
தங்கு தடையின்றி(த்)
தழைத்தோங்க வாழ்த்துகிறேன்!

ஆதவனே உன்பிறப்பால்
அகில மொளிர்கிறது
பாதகங்கள் எமைவிடுத்து(ப்)
பதறிச் சிதைகிறது!

விடுதலைக்கு வித்திட்ட
வீரத் தமிழ்மறவா!
நடுநிலைக்கு நயமீயும்
நற்றலைவா வாழ்த்துகிறேன்!

*வி.சி.குஞ்சிதபாதம்.*

## நீடூழி வாழ்க

வல்லைத்தாய் ஈன்றெடுத்த
வலவை மண்ணிற்கு உரியோனே
ஐம்பதாம் அகவையாம் பொன்நாளில்
காலடி எடுத்த வைத்து

கார்த்திகை விளக்கீட்டில்
தீபங்கள் சுடர்விட
இனிய இந்நாளாம்
தலைவலின் பிறந்தநாள்

கார்த்திகை விளக்கீடு
அந்த சேயோனுக்கு
ஆனால் இம்முறை விளக்கீடு
நம் சேனைத் தலைவனுக்கு

காலங்கள் வருவது
வயதுகள் ஏறிச்செல்ல
எம்தலைவனுக்கு காலங்கள் வருவது
புகழும் ஆயுளும் ஏறிச்செல்ல

இம்முறை பொன்னாளாம்
அண்ணனின் பிறந்தநாள்
என்றென்றும் பொன்நாளாக
வாழ்த்துகின்றேன்

*சி.ராதிகா (பொலிகை)*

## தமிழீழத் தேசியத்தலைவர்

தன்னிகரில்லாத் தலைவர்
தரணிபோற்றும் வீரர்
தமிழர் இதய நாயகர்
தமிழீழத் தேசியத் தலைவர்

தமிழர் பெருமை காத்தவர்
தமிழர் துயர் தீர்த்தவர்
தமிழர் தலை நிமிர வைத்தவர்
தமிழர் வரலாறு படைத்தவர்

தமிழர் நிலைகண்டு கொதித்தவர்
தமது கையில் ஆயுதம் எடுத்தவர்
தமிழர் படையொன்றை அமைத்தவர்
தரணி போற்ற இன்று உயர்ந்தவர்

*ந.இராசதுரை (புங்குடுதீவு)*

## பார்த்திபனாய் நின்றாய்

கத்துகடல் முத்தெனவே
புத்திரனாய் வந்தாய் – தமிழர்
தத்து அது செத்தொழிய
சக்தியென நின்றாய்
பத்துவிரல் அத்தனையும்
புத்தியெனக் கொண்டு – பகை
செத்து விழ நித்திலத்தில்
நித்தம் பணி செய்தாய்
காத்திருந்த மண் மகிழக்
கார்த்திகையில் வந்தாய் – நீர்
கோர்த்திருந்த விழி துடைக்கும்
பார்த்திபனாய் நின்றாய் – எதிர்
பார்த்திராத பகை தொடுத்த
கணையுடைத்து நீயும் – தமிழ்
காத்தவனே வாழ்த்துகின்றோம்
புத்தகவை தன்னில்

*சொலமன் சூ.சிறில்.*

## பல்லாண்டு வாழ

நிழல்தரும் சோலையென
நம்தலைவன் இருக்கையிலே
நிம்மதிக்குறைவேது
தமிழனவன் உள்ளமதில்
காவியத் தலைவனாய்
காசினியில் நீயிருந்து
காவியங்கள் படைத்திடவே
கருணையுடன் வாழ்த்துகிறேன்.

*பொலிகையூர். சாந்து*

பொன்விழாக் காணும் பொன்னழகு
தலைவர் மாமாவிற்கு எங்களது வாழ்த்துக்கள்

## எங்களுக்காக ஒரு கதவு திறக்கப்பட்டது

எங்களுக்காக ஒரு கதவு திறக்கப்பட்டது
இருண்ட தமிழர் தேசத்திற்கு ஒளியாக
தமிழரின் காவலன் வருவாரென
காலம் பொறுமையுடன் காத்திருந்தது
நேரம் கனிந்தது
வாழ்வும் துளிர்ந்தது
தமிழன்னையின் துயர்துடைக்க
தலைப்பிள்ளையாக கரிகாலன்
தமிழ்த்தாயின் அழுகையோடு
எழுகையாக வல்வையில் அவதரித்தார்
கரிகாலன் பிறந்த வலியை மறந்து
தன் கண்ணீரை அப்போதுதான்
முதல் முதலாக தன் முந்தானையால்
துடைத்துக் கொண்டாள் தமிழன்னை
வரலாறே வழி காட்டிவிட்டது
இருண்ட தேசத்திற்கு ஒளியாக வந்தார்
பட்டமரமாக நின்ற தேசம்
உன் வரவால் துளிர்த்தது
பாலைவனமாக வெறிச்சோடியிருந்த
எம் தேசம் சோலையாக மலர்ந்தது
வல்வையின் அட்சய பாத்திரமே!
அணைக்கிற கைதான்
அள்ளிக் கொடுக்கிற கை என்ற புதுமொழிக்கு
அர்த்தத்தை உங்களுடன் இருந்தல்லவா
புரிந்து அறிந்துகொண்டோம்
கடவுள் ஒரு கதவை மூடினால்
இன்னொரு கதவைத் திறப்பானாம் – ஆனால்
எங்கள் வாழ்க்கையில் கடவுள்
ஒரு கதவையேனும் திறக்கவில்லை
திறந்து கிடந்த கதவையும் அநாதைகள் என்றே கூறி
அவனே இறுக்கிப் பூட்டிக் கொண்டான்
பூட்டிய கதவின் சாவியைக் கூட
அவன் தொலைத்து விட்டான்
இரக்கம் கொண்ட நெஞ்சங்களே!
நீங்களாவது தேடியிருக்கலாம்
தொலைந்த அந்தச் சாவியை
அந்த மனிதாபிமான முயற்சியைக்கூட
அன்று நீங்கள் மறந்து போனீர்கள் ஏன்?
அந்த சாவியில்தானே எங்களது வாழ்விருந்தது
தட்டுங்கள் கதவு திறக்கப்படும் என்றீர்கள்
தட்டித்தட்டி எங்கள் பிஞ்சுக் கரங்களல்லவா
அன்று சிவந்து போனது
கேளுங்கள் தரப்படும் என்றீர்கள்
கேட்டுக்கேட்டு எங்கள் குரல்களல்லவா
அன்று மரத்துப்போனது
அநாதைகள் என்று ...
எங்களைக் கைகழுவிவிட்டவர்களே!
எங்களுக்காக ஒரு கதவு திறக்கப்பட்டது
திறந்தவர் கடவுள் அல்ல
எங்கள் தலைவர் மாமா
நாங்கள் வெறும் பூச்சியங்களே பெறுமதியில்லையாம்
தலைவர் மாமா எங்களோடு சேர்ந்தபோதுதான்
எங்களுக்கு பெறுமதியே கிடைத்தது
நீங்கள் இல்லையென்றால்
எங்கள் வாழ்வில் ஒளியே இல்லையாம்
தலைவர் மாமா எமக்குத் தந்தைதான் – ஆனால்
தாயுள்ளம் கொண்டவர்
மாமாவைப் பார்க்கத் துடிப்பதில் ஒரு சுகம்
மாமாவைப் பார்ப்பதும் ஒரு சுகம்
மாமாவுடன் கதைப்பது அதைவிட சுகம்
மாமாவை அணைத்துக்கொண்டு
மாமாவின் கரம் பற்றி அன்புடன் கதைப்பது
அதைவிட மேலான ஒரு சுகம்
யாருக்கும் கிடைக்காத அந்த மூன்று பெரும்
பாக்கியங்களை நான் பெற்றிருக்கிறேன்
தலைவர் மாமாவின் உள்ளம் தாயுள்ளமே
எந்த சபை சந்தியிலும் எல்லோருக்கும்
சரியாசனம் தருவார்
பார்க்கத் தூண்டும் முகம்
மீண்டும் மீண்டும் பார்க்கத் துடிக்கும் முகம்
எத்தனை தடவைகள் பாத்தாலும்
சலிக்கவே சலிக்காத முகம்
மீண்டும் மீண்டும் பார்க்கத்துடிக்கும் – ஏன்
பேசவும் துடிக்கும்
தோல்விகளிலிருந்தே நிறைய
கற்றுக்கொள்ள விரும்புபவர்
இவர் விரும்பினாலும் தோல்வி விரும்பாது
அதனால் தான் தோல்வியைச் சந்திக்காத தலைவரிடம்
தோல்வி தோற்றுப்போவதைத்தான் விரும்புகிறது
வெற்றிகள் இவருக்குச் சொந்தம்
பத்துக்கோடி தமிழ் மக்களின்
இதயம் எனும் அமுதத்தை உண்டவரே
உமக்கு ஆயுள் கோடியப்பா
காலத்தை வென்றவனே!
பேசாது வென்ற வரலாறுகள் தான்
உமக்கு அதிகமுண்டு – இனி
பேசிவெல்லப்போகும் காலமிது
அந்தக் காலத்தையும் வென்று
வெற்றிவாகை நமதேயென
இப்புனித நாளிலே நீடூழி வாழ்க
வாழ்கவென வாழ்த்துகின்றோம்.

*வல்லவர் யோ.யூட்நிமலன், (காந்தரூபன் அறிவுச்சோலை)*

## அகவை ஐம்பதில் அண்ணல்

அகவை ஐம்பது காணும் அண்ணலே
அகிலமே போற்றும் வள்ளலே
வல்வை மண் தந்த தங்கமே
வானுயர் புகழ் பாடும் சிங்கமே
ஏன் எதற்கு என கேட்க நாதியில்லா
எம் தமிழ் இனத்தை
ஏனடா நீயாரடா எனக்கேட்டு
களம்பல வென்ற மறவனே
எட்டப்பர் பலர் உனக்கிருந்தும்
அந்த வீணரையெல்லாம்
வெட்டிப் பதர்களாகப் விரட்டிய வேழமே
வேண்டும் எமக்கொரு தமிழ் ஈழம் எனப்
பறை சாற்றிடும் புலித் தலைவனே
இன்னும் எழுதத்தான் துடிக்கிறேன் – உன்னை
என் எண்ணங்களால்
ஏடு போதாதென நினைக்கிறேன் – எனவே
இத்துடன் இதனை முடிக்கிறேன்
வாழ்க உன் புகழ் வளர்க உன் நலம்
தமிழ்ஈழம் அதில் மகிழ்வோம் விரைவினில்

*ஏ.ஜி.துரை (குருநகர்)*

## கரும்புச் சூரியன் பிரபாகரன்

சமுத்திரம் தாலாட்டும் தங்கச் சூரியன் பிரபாகரன்
சரித்திரம் தேரோட்டும் வேங்கைச் சூரியன் பிரபாகரன்
நினைத்ததை முடித்திடும் நெருப்புச் சூரியன் பிரபாகரன்
நிம்மதி வழங்கிடும் விடுதலைச் சூரியன் பிரபாகரன்
கரும்புலிகள் வளர்க்கும் இரும்புச் சூரியன் பிரபாகரன்
கவிதைகள் சுவைக்கும் கரும்புச் சூரியன் பிரபாகரன்
வரும்பகை அழிக்கும் இரத்தச் சூரியன் பிரபாகரன்
வளர்பிறை அழகில் விழிக்கும் சூரியன் பிரபாகரன்

*பூ.புவேந்திரராசா,*


## உலகம் போற்றும் ஒப்பற்ற தலைவன்

தேசியத் தலைவன் எங்கள் பிரபா
சிந்தனை எல்லாம் தமிழீழமொன்றே
காசினி போற்றும் கர்ம வீரன்
காதல் எல்லாம் தமிழீழ மக்களில்
நேசித்த மண்ணையும் மக்கள் தம்மையும்
நிம்மதியாக வாழவைக்கவே
யோசித்துப் பலதிட்டங்கள் தீட்டினான்
உழைத்திட பலதியாகங்கள் உருவாக்கினான்
இலட்சிய வேங்கைகள் இன்னுயிர் ஈய்ந்தனர்
ஏந்திய துப்பாக்கி கட்டிய சையினைட்
உலகமே போற்றும் உன்னத படையணி
உயிரைக் கொடுக்கும் ஒப்பற் றவுறுதி
மலரும் தமிழீழம் ஒன்றே மந்திரம்
மானம் காக்கும் மறத்தமிழ் வீரம்
தலைவன் பிரபா காட்டும் தனிவழி
சாதனை நாட்டுவர் சரித்திரம் படைப்பர்

*கவிஞர்.வ.யோகானந்தசிவம்.*

# தேசியத் தலைவரின் 50 ஆவது அகவை வாழ்த்து மலர்

## ஐம்பதாவது அகவையைப் பூர்த்தி செய்யும் எங்கள் தேசியத் தலைவர் நீண்ட ஆயுளும் நிறை செலவமும் பெற்று பல்லாண்டு வாழ்கவென வாழ்த்துகிறோம்.



நாளெல்லாம் புத்துணர்வுடன் இருக்க அருந்துங்கள்

**அண்ணா கோப்பி**

வளரும் குழந்தைகளுக்கும், கர்ப்பிணித தாய்மாருக்குச் சிறந்த போஷாக்குமிக்க உணவு ஜீவாகாரம்.

உங்கள் பற்களின் வெண்மைக்கும். உறுதிக்கும் பற்களை பளபளக்க வைக்கும்
**அண்ணா பற்பொடி.**

அகத்தின் அழகு முகத்திலல்ல, உங்கள் கன்னதத்தில் பார்க்க இனறே வாங்குங்கள்
**புளும் ரெல்கம் பவுடர்**

மேலும் உங்கள் சமையலை இலகுவாக்கி விரைவாக உணவு தயாரிக்க அண்ணாவின் தயாரிப்புகள்

*தோசை மா *ஆட்டா மா *சரக்குத்தூள்
*உழுந்து மா *குரக்கன் மா *துண்டுமிளகாய்
*வறுத்த உழுந்து மா *கடலை மா *மஞ்சள் தூள்
*சிவப்பு அரிசி மா *கறி மிளகாய்த்தூள் *மிளகுத்தூள்
*வெள்ளை அரிசி மா *தனி மிளகாய்த்தூள் *சீரகத்தூள்

: உங்கள் ஆலயங்களிலும் இல்லங்களிலும் நறுமணம கமழ **அண்ணாவின்** ஊதுபத்திகள்

*ரோஸ் பத்தி *மதுரங்கா பததி *சுகந்தமல்லி பத்தி *துர்க்கா பத்தி

இவை அனைத்தையும் சுலபமாக இன்றே பெற்றுக்கொள்ள நாடுங்கள

Manufactured & Marketed by ANNA INDUSTRY - INUVIL T.P - 021 - 222 3565

---

**பொன்விழாக் காணும் தேசியத் தலைவரை G.M.K Communication உரிமையாளர், ஊழியர்கள் மற்றும் வாடிக்கையாளர்கள் அனைவரும் பல்லாண்டு வாழ வாழ்த்துகிறார்கள்**



✔ உள்ளூர் அழைப்புகள் ✔ இன்ரநெற் மூலமான சர்வதேச அழைப்புகள் (நிமிடத்துக்கு 8/=) ✔ பக்ஸ் ✔ கொம்பியூட்டர் பிறிண்டிங் ✔ கொம்பியூட்டர் ரைப்பிங் ✔ கையடக்கத் தொலைபேசிக்குரிய Kit Cards ✔ கொம்பியூட்டர் திருத்த வேலைகள் ✔ யாழ் - கொழும்பு விமானப் பதிவு மற்றும் வான் ஆசனப் பதிவு

என்பனவற்றை நியாயமான கட்டணத்தில் பெற்றுக்கொள்ள நாடவேண்டிய சிறந்த இடம்

**G.M.K COMMUNICATION**

இல: 302, கோவில் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

T.P: 021 - 222 3760
021 - 4591194

---

பொன் விழாக் காணும் எமது தேசியத் தலைவர் பல்லாண்டு வாழ வாழ்த்துகிறோம்

* Calling Cards *இன்ரநெற் மூலமான வெளிநாட்டு அழைப்புக்கள
* Internet Browsing, e-mail, Fax வசதிகள் *போட்டோக் கொப்பி ஆகியவற்றை மிகமிகக் குறைந்த கட்டணத்தில் பெற்றுக்கொள்ளலாம்.
* மததிய கிழககு நாடுகள மறறும இந்தியாவுககு மிகக்குறைநத கட்டணம்.

**அருள் கொமினிக்கேஷன்ஸ்**

இல: 01, நாவலர் வீதி,
(பிறவுண் வீதிச் சந்தி) யாழ்ப்பாணம். T.P :- 021 222 3536

---

உலகின் கண்ணே உண்மை உரைத்தாய்
உயர்வில் வளரும் இயல்பு நிறைந்தாய்
மாண்புகள் பெருக்கி மகத்துவம் அளித்தாய்
தமிழர் மகுடம் தாங்கிட உழைத்தாய்
வாழ்க வாழ்க வளமுடன் வாழ்க
வலிமை யாவும் வளரவே வாழ்க.

**துன்னாலை கலிகைக் கந்தன், விளையாட்டுக் கழகம்**

---

## ஐம்பதாவது அகவையைப் பூர்த்தி செய்யும் எங்கள் தேசியத் தலைவர் நீண்ட ஆயுளும் நிறை செல்வமும் பெற்று பல்லாண்டு வாழ்கவென வாழ்த்துகிறோம்.

யாழ். குடாநாட்டில் அதிரடி விலையில் ரூ.14000/= மட்டும்

நவீன தொழில்நுட்பத்துடன் மேசைத் தொலைபேசி இணைப்புக்களை உங்கள் இல்லங்கள், அலுவலகங்கள் ஆகிய இடங்களில் உடனுக்குடன் பொருத்தித் தருவதில் பல வருட அனுபவம் வாய்ந்தவர்கள்



# பவர் செலுலர் ட்ரேடிங் கம்பனி

உங்கள் கையடக்கத் தொலைபேசிகளை உடனுக்குடன் பழுது பார்த்துத் தருவதோடு UNLOCK செய்தும் தரப்படும்.

**உங்கள் தொடர்புகளுக்கு**

**அலுவலகம்:-**
இல:185, (முதலாம் மாடி)
கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.



**கிளை நிறுவனம்**
இல:- 205/1 (ராஜா தியேட்டர் கொம்பிளக்ஸ்)
கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

T.P: 021 222 7070
0712 399220
077 281521

# தேசியத் தலைவரின் 50 ஆவது அகவை வாழ்த்து மலர்


ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நம




பொன்விழாக் காணும் எமது
தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு
வே.பிரபாகரன் பல்லாண்டு காலம்
நீண்ட ஆயுளோடு பார்போற்ற வாழ
வாழ்த்துகிறோம்,

GEETHA JEWELL HOUSE

பெண்மைக்கு மெருகூட்டும் இளமைக்கு எழிலூட்டும்
அசல் 22 கரட் தங்கநகைகளை எழில்மிகு வடிவில்
செய்து பெற்றிட வாரீர்

கீதா ஆபரண மாளிகை

(முற்றிலும் குளிரூட்டப்பட்டது)

இல.12, நவீன சந்தை, கண்டிவீதி,
சாவகச்சேரி.
தொ.பே. 0777 737336

உரிமையாளர் : – கந்தசாமி ஜீவகாந்தன்

---

50ஆவது அகவையைத் தொடும் எம் தலைவருக்கு
பிறந்த நன்நாள் வாழ்த்துக்கள்.



- இலவசமாகக் கண்களைப் பரிசோதித்து, நவீன ரக கண்ணாடிகளைப் பெற்றுக்கொள்ளவும்,
- இழந்த பற்களுக்கு நிகராக சங்குப்பற்களைக் கட்டிக்கொள்ளவும்,
- உறுதிமிக்க பற்கிளிப்புக்களைப் பொருத்திக்கொள்ளவும், வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யபட்ட நவீன முறையிலான கேஸ் வகைகளைப் பெற்றுக்கொள்ளவும்,
- விரும்பிய நிறங்களில் பிளாஸ்ரிக் லென்ஸ், போட்டோ கிறே லென்ஸ் என்பவற்றைப் பெற்றுக்கொள்ளவும்,

நீங்கள் நாடவேண்டிய ஒரே ஸ்தாபனம்

எரிக் கணேஸ்

கிளை இல 91,
K.K.S.Road,
Kokuvil.
கிளை இல 80சு
K.K.S. Road
Chunnakam.

556,564 ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம். T.P.222 2486

மூக்குக் கண்ணாடியகமும்
பல்கட்டுமிடமும்,
கட்டுப்பற்களைச் சுத்தம்
செய்யும் மாத்திரை
விற்பனைக்கு உண்டு.

---

தமிழர் பெருமையைத் தரணி போற்றவைத்த எமது
தேசியத் தலைவா! –உம்மைப் பல்லாண்டு
வாழ்கவென வாழ்த்துகிறோம்.

ஜெயா பான்ஸி ஹவுஸ்

உங்களுக்குத் தேவையான அழகுசாதனப் பொருட்கள்,
அன்பளிப்புப் பொருட்கள், கண்கவர் இமிரேசன் வகைகள் (GOLD COVERING) போன்றவற்றை ஒரே இடத்தில் நியாயமான விலையில்
பெற்றுக்கொள்ள நாடவேண்டிய இடம்

JEYA FANCY HOUSE

T.P - 021 222 2171
- 021 222 7409

இல.149,160 நவீன சந்தை,
யாழ்ப்பாணம்.

Sub Agent for Dialog G.S.M kit Card.

---



பொன்விழாக் காணும்
தமிழீழத் தேசியத்
தலைவருக்கு எமது
நல்வாழ்த்துக்கள்!

❄கட்டடப் பொருட்கள்
❄பெயின்ற் வகைகள்
போன்றவற்றை நிதானவிலையில்
ஓரிடமாகப் பெற்றுக்கொள்ள நீங்கள்
நாடவேண்டிய ஒரே இடம்

கஜமுகன் ஹாட்வெயர்ஸ்


CALTEX 2T ஒயிலுக்கான
வடமாகாண ஏகவிநியோகஸ்தர்கள்

கஜமுகன் ஹாட்வெயர்ஸ்

இல: 147,149 ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
T.P:021 - 222 - 2833

---

தமிழீழத் தேசியத் தலைவர் இன்று
50ஆவது அகவையைப் பூர்த்தி
செய்வதையிட்டு எமது
நல்வாழ்த்துக்கள்.
அவரது சேவை மீண்டும் மீண்டும்
தொடர வாழ்த்துவோர்



சரஸ்வதி அரிசி ஆலை
உரிமையாளர்கள், ஊழியர்கள்.

சிறந்த முறையில் நெல் உடைத்து தீட்டியும், மிளகாய், அரிசி, குரக்கன், ஒடியல், ஈர அரிசி அரைத்தும், வடை, இட்டலிக்கு ஈர உழுந்து அரைத்தும், சீயாக்காய், கோப்பி என்பன அரைத்தும் கொடுக்கப்படும்.

சரஸ்வதி அரிசி ஆலை

உள்ளூர், வெளியூர் தொலைத்தொடர்பு சேவை, போட்டோப் பிரதி, தொலைநகல், (Fax) வசதியும் குறைந்த செலவில் செய்துகொடுக்கப்படும்.

சரஸ்வதி தொலைத் தொடர்பகம்

உள்ளூர் T.P - 021- 222 3105
வெளியூர் T.P - 0094 -21 222-3105

ஆடியபாதம் வீதி(பழைய ஸ்ரேசன் றோட்),
கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.

# தேசியத் தலைவரின் 50 ஆவது அகவை வாழ்த்து மலர்

**பொன்விழா நாயகனே! எல்லா நலனும் பெற்று பாரினில் பல்லாண்டு வாழ வாழ்த்துகிறோம்.**



அனைத்து வயதினருக்கும் ஏற்ற
ஆடைத்தினுசுகளை உங்கள் எண்ணம்போல்
தெரிவு செய்திட மற்றும் அழகுசாதனப்
பொருட்களை ஒரே இடத்தில் பெற்றிட

**நாடவேண்டிய இடம்**

## கணேசன் சென்ரர்

கே.கே.எஸ்.வீதி, இணுவில்
(ஆஸ்பத்திரி முன்பாக)

T.P. 222 5708

---

**தலைவா!**


**இறை அருளால் நீடூழி வாழி**

வலம்புரியின் முத்தென வையம் வந்தாய்
வாகு பெறு தாய் மடியில் தவழ்ந்துமே வளர்ந்தாய்
கோமானே பிரபாகரனெனும் நாமம் பூண்டாய்
தலம் யாவும் கொண்டாடும் தமிழீழ விடுதலைப்புலிகள்
இயக்கத் தலைவனாகத்
தகமை பெறு கீர்த்தி யாவும் கண்டாய்
நிலவு புகழலோ அகவை ஐம்பதென்ன
நிறைகுடம் போல் இறை அருளால் நீடூழி வாழி

**துன்னாலை தெற்கு கிராம**
**அபிவிருத்திச் சங்கம்**

கரவெட்டி.

---




வல்ல தமிழ் மகனே வாழ்க!
தமிழர் வாழ்வின் தவமே வாழ்க!
தமிழர் உயர்வின் வரமே வாழ்க!
வெறுமை விலக்கிய பொலிவே வாழ்க!
வலிமை பெருக்கிய திருவே வாழ்க!
வாழ்க வாழ்க வல்ல தமிழ்மகனே வாழ்க!
அகவை ஐம்பதைக் காணும் தலைவா வாழ்க!

**நெல்லியடி ஓட்டோ**
**உரிமையாளர் சங்கம்**

---

## புயலுடுத்துப் பிறந்த நிலவு

பொங்கு கடல் ஓரத்தில் கார்த்திகைப் பூ மாதத்தில்
புயலுடுத்துப் பிறந்த நிலவே!
பொதிகை மரச் சாரலிலே பூப்படைத்த தமிழ் மகவின்
புகழ்பாடும் கவிஞர் பொருளே!
விடுதலைப் பண் இசை மீட்ட யுகக் குயிலாய் அவதரித்த
மானமறம் தாங்கும் விழுதே! - ஆதிக்க
கொடூர மழை பெய்து நிதம் தமிழர் நிலம் உழுதவரை
கருவறுத்த வீரக் கலையே!
எரிமலையின் ஒப்பனையே! - இடி பிறக்கும் கருவறையே!
அகலாத விடிவின் துயரே!
பரணிகளின் புது உருவே.... மறவர்களின் மணிவிளக்கே!
சுவையாக அமைந்த மொழியே!
நெருப்பு வரிக் கவிதைகளில் முகவரியாய் அவதரித்து
நீடு துயில் களைந்த இசையே!
அகவையது கழிகிறது ஐம்பதிலே
பிரபாகரன் தமிழர் வரமே!

**தேசிய எழுச்சிப் பேரவை**

கரவெட்டி.

---

**அகவை ஐம்பதைக் காணும் எம் தலைவர் என்றென்றும் வாழ வாழ்த்துகிறோம்.**

☞ புத்தம் புதிய துவிச்சக்கர வண்டிகள்
☞ T.V, டெக் வகைகள்
☞ றேடியோ வகைகள்
☞ அவற்றிற்கான உதிரிப்பாகங்கள்
☞ அன்ரனா வகைகள் போன்றவற்றை

மொத்தமாகவும் சில்லறையாகவும் யாழ்.நகரில் பெற்றுக்கொள்ள

## இ.ச.பேரம்பலம் சக நிறுவனம்

**E.S.PERAMPALAM AND CO**

(PEPSI, MIRINDA, 7UP போன்றவற்றிற்கான ஏகவிநியோகஸ்தர்கள்)

T.P : 021 222 2988, 021 222 3096
Fax : 021 222 2368

இல:50,52,54, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

---

வாழ்க வாழ்க வல்லமை குறையாது வாழ்க!
தமிழினம் தலைநிமிர வீர வரலாறு படைத்தவர்
தமிழுக்குப் பொலிவு தந்து தூய தமிழ்
முழங்கச் செய்தவர்
இனத்தின் விடுதலைக்கு ஏற்ற போராட்டம் நடத்தி
ஈடில்லா வெற்றிக்கு வழிசமைத்த வல்லவர்
எங்கள் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன்
வாழ்க வாழ்க பல்லாண்டு வாழ்க.

**ஜங்ஸ் ஸ்ரார்**
**விளையாட்டுக்கழகம்**

துன்னாலை.

---

## வளமோங்கி வாழ்வாய்

அன்னை மண்ணின் அருந்தமிழ்ப் புதல்வா!
விடுதலை வீரர் வரிசையின் முதல்வா!
விண்ணை முட்டிய உயர்திருப் பொலிவே!
அகவை ஐம்பதைக் காணும் தலைவா!
பெறுவாய் விடுதலை பேறதைப் பெறுவாய்!
வாழ்வாய் நலமுடன் வளமோங்கி வாழ்வாய்!

வல்லியானந்தம் விளையாட்டுக்கழகமும்
சனசமூக நிலையத்தினரும்
துன்னாலை வடக்கு.

---

**50ஆவது அகவையைப் பூர்த்தியெய்திய எமது தேசியத்தலைவருக்கு நல்வாழ்த்துக்கள்**

அன்றும்! இன்றும்!! என்றும்!!!

**இதமான புகை இன்பத்திற்கு**

## ஆர்.வி.ஜி. பீடிகள்

இல: 58,நல்லூர் குறுக்குவீதி, யாழ்ப்பாணம். T.P: 021-222 6806

ஆங்கில மருந்து வகைகள், ஊட்டச்சத்து பால்மா வகைகள் என்பவற்றை நியாயவிலையில் பெற்றுக்கொள்ள

**R.V.G மெடிக்கல்ஸ்**

இல: 504,ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

T.P: 021-222 2129

# தேசியத் தலைவரின் 50 ஆவது அகவை வாழ்த்து மலர்

## ஞாலம் போற்றும் மாவீரன்



தமிழீழத் தானைத் தலைமகன்
தன்கடல் சூழ் ஞாலம் போற்றும் மாவீரன்
பொங்கும் அகவை ஐம்பது நிறையப்
பொன்விழாக் காணும் வெள்ளணி நாளில்
இன்னும் பல்லாண்டு இன்பமாய் வாழ
அன்புடன் வாழ்த்துகிறோம்.

*பணிப்பாளர்கள். பணியாளர்கள், அங்கத்தவர்கள்.*

**புலோலி ப.நோ.கூ சங்கம்**

புலோலி கிழக்கு, பருத்தித்துறை.

தொ. பே. இல:- 226 3275

---

பொன்விழா நாயகனே! தேசியத் தலைவா! ~ நீர்
பல்லாண்டு வாழ வாழ்த்துகிறோம்.

வடபகுதியில் அரச அங்கீகாரம் பெற்ற விளம்பர முகவர்

**ஜோ.எகட்டன் செனித் மார்க்கட்டிங் அன்ட் அட்வடைசிங் சிஸ்ரம்**

கண்டுக்குளி மகளிர் கல்லூரி முன் ஒழுங்கை, கண்டுக்குளி, யாழ்ப்பாணம்.

உங்கள் விளம்பரங்கள் எதுவானாலும், இலங்கையில் எந்த அலைவரிசை,
பத்திரிகை, தொலைக்காட்சியில் விளம்பரம் செய்வதற்கும்

**ஜோ.எகட்டன் செனித் மார்க்கட்டிங்
அன்ட் அட்வடைசிங் சிஸ்ரம்ஸ்**

தொடர்புகளுக்கு நேரில் விஜயம் செய்யுங்கள்.

தொலைபேசி
தொலைநகல் 021 222 7227 காரியாலய நேரம்: 10.30 - 3.30வரை

புதுயுகத்தின் புது உருவம் செனித்.

---

## கொள்கை வீரனே!

அகவை ஐம்பதில் அடிவைக்கும் எம் தலைவா!
வேலெடுத்து தேவர்கள் வினைமுடித்தான் அன்றொருவன்
சுடுகனல் ஏந்தி பகை முடித்து தமிழர் துயர் துடைத்தாய் இன்று
உன் காலத்திலே பிறக்கும் தமிழீழம் - அதில்
உன் நாமம் ஓங்கி ஒலிக்கும்
என்றும் தமிழர் வீரம் உலகத் திசையில் ஜொலிக்கும்
அஞ்சா நெஞ்சம் கொண்ட கொள்கை வீரனே!
உன் வரவு கண்டுதான் எம் பூக்கள் பூத்தன.

நம் தேசியத் தலைவனின் அகவை ஐம்பதிலே தமிழர் தம் தாயகத்தின் பொருளாதார மேம்பாட்டிற்கு உத்வேகம் அளித்திட உள்ளூர் உற்பத்திக்கு ஊக்கம் அளித்திடுவீர்.

*பணிப்பாளர்கள், பணியாளர்கள்.*

**வலிகாமம் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தனி (மட்டு)**

T.P:- 021 222 3465

மானிப்பாய்.

---



தமிழினத்தின் பெருமைகளை
உலகத்திற்குப்
பறை சாற்றியதுடன் தமிழர்களின்
உரிமைப்போராட்டத்தை
வழிநடத்தி தமிழர்கள்
நிம்மதியாக வாழ வழிவகுத்த
எங்களது தேசியத்தலைவரின்
50ஆவது பிறந்த தினத்தில்
தமிழின உரிமைப்
போராட்டத்தில் பல
வெற்றிகள் பெற்று
வாழ வாழ்த்துகிறோம்.

**POWER GYM**
**BODY CARE AND FITNESS CENTER**
**230/1 NAVALAR ROAD,**
**JAFFNA.**

---

## பல்லாண்டு வாழ்க!

வடமராட்சி மண்ணில் வடிவோடு
வாய்த்தமைந்த
வல்வெட்டித்துறை விளங்கும்
பொங்கிடும் கடற்கரையினிலே
பொலிவுடன் பிறந்த பிள்ளை
எங்கள் பிள்ளை
வேலுப்பிள்ளை பார்வதி
தந்த பிள்ளை
வரலாறு தத்தெடுத்த
தமிழினத்தின் சொந்தப்பிள்ளை



அகவை ஐம்பது காணும் அப்பிள்ளை மேலும் பல்லாண்டு
நலமோடு வாழ வாழ்த்துகிறோம் வாழ்த்துகிறோம்.

**வடமராட்சி தேசிய எழுச்சிப் பேரவை**

வடமராட்சி.

---

## வாடாத மலர் நீ

வருடத்தில்
ஓர்முறை உதிக்கும் பூ
கார்த்திகைப் பூ
தமிழர்க்காய்
கார்த்திகை தந்த பூ
எம் தேசியப் பூ
ஐந்தில் அல்ல
ஐம்பதிலும் அழியாத
உன் புன்சிரிப்பு
தமிழ் தேசியத்தை
நேசித்துக் காப்பாற்றும்
உன் வீராப்பு
எதிரிக்கு
யமனாகப் பயம் கொடுக்கும்
உன் படையெடுப்பு
உன் வீரத்தால்
இந்தியாவுக்கும்
கொடுத்தாய் படபடப்பு
மண்ணுக்காய்
மடிந்த மாவீரர்
உன் பாசப் பூ
தமிழர்க்கு
தமிழீழம்
உன் தவிப்பு
ஓர் நாளில்
உன்னாலே
தனி ஈழப் பூ
எம் தலைவா
ஐம்பதல்ல
நூறையும் தாண்டிப்போ
வாழ்க தேசியத் தலைவா
மலர்க தமிழீழம்.

**நெடுந்தீவு ப.நோ.கூ.சங்கம்**

*தலைவர்,*
*பணிப்பாளர்கள், பணியாளர்கள்.*

---

## தலைவா வாழ்க

வளரும் தலைமுறைகள் வாழ
வகை செய்து வைத்தவரே வாழ்க!
முன்பள்ளி சிறார்களுக்கு கல்வி புகட்டும்
நிறுவனம் அமைத்துத் தந்தவரே வாழ்க!
மழலைகள் மனதிலும் நீக்கமற
நிறைந்தவரே வாழ்க!
அகவை ஐம்பதில் காலடி வைப்பவரே வாழ்க!
வாழ்க வாழ்க தலைவா வாழ்க!
மனமார வாழ்த்துகிறோம்
அன்போடு வாழ்த்துகிறோம்.

*வடமராட்சி முன்பள்ளி ஆசிரியர்கள்.*

---

## குன்றா நலமுடன் வாழ்க!

குனிந்து நின்ற இனத்திற்கு
நிமிர்ந்திடும் வரலாற்றைத் தந்தவர்
உலக அரங்கில் உன்னதத் தேரில்
உலாவர தமிழினத்தை ஏற்றிவைத்தவர்
அகவை ஐம்பதைக் காணும் எம் தலைவர்
என்றென்றும் குன்றா நலமுடன்
வாழ வாழ்த்துகிறோம்.


**தமிழ் மாணவர் ஒன்றியம் வடமராட்சி.**

# தேசியத் தலைவரின் 50 ஆவது அகவை வாழ்த்து

## வீர மகன் நீ வாழி!

இருளினுள் அலையும்
இனமதன் நிழலை
நிஜத்துடன் மிளிர்த்திட
நிலவொளியின் மைந்தனாய்
நீ உதித்தாய்
விடியலின் விளக்கே
தமிழ் நல்லுலகு கூறும்
தன்னிகரில்லாத் தலைவா!
மலையென நிமிர்ந்து
தடைபல தகர்த்து
தமிழ் பொங்கிட - இத்
தரணியில் உதித்த
உன் மீது புகழ் ஓங்குக
அகவை ஐம்பதாய்
உன் திருவொளிச் சுடர்
தமிழ் ஈழம் எங்கணும்
தகதக வென ஒளித்திட
தலை தாழ்த்தி வாழ்த்திடுவோம்

ம.திருவரங்கன்
வட்டுக்கோட்டை



இன விடுதலையும் சமூக விடுதலையும்
வேண்டி நிற்கும் தமிழ்மக்களுக்காய்
சமதர்மத் தமிழீழம் தந்திடவே
தர்மயுத்தம் புரிகின்ற எம் தலைவா
தமிழீழப் பரணி பாடுகின்ற நேரம்
நெருங்குகிறது காரிகாலரே எமக்காய்
ஆலம் கழுத்தில் அணிந்த தமிழ் முதலே
பொய்யிலா மேனியைக் கொண்டுமே எம்முடன்
மெய்ப்பொருளதாய் வாழ்ந்து நிற்பாய் என்றும்
மெய்ப்பொருளதாய் வாழ்ந்து நிற்பாய்

## குடவத்தை முருகன் விளையாட்டுக் கழகம் - துன்னாலை



பொன்விழாத் தலைவன்
பிரபாகரனை வாழ்த்துகின்றோம்

## நியு கார்த்திகா நகைமாடம்

(290)212, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

## சிற்றிபோய் ரெயிலர்

இல.5 K.K.S ROAD JAFFNA



பொன்விழாத் தலைவன்
பிரபாகரனை வாழ்த்துகின்றோம்

## Karan Electronics
## கரன் எலக்ரோனிக்ஸ்


T.V, Deck, Radio, Wall clock, Wrist Watch, Gift Items
T.P- 021 2226807 Mob : 0777 567785 N0. 68, Kasthuriyar Road, Jaffna



மண்ணில் ஒரு..
பொன்னொன்று உதித்த நாள்-இது
விண்ணில் முழுத்
தண்மதி பிறந்தநாள்
கண்ணில் பெரும்
கனலொன்று.. தெறித்த நாள்
சின்னத்தளிர் "பிரபா" எனும்
தமிழீழ தலைவன் பிறந்தநாள்

## வெண்ணை வாணிப சங்கம்

வலிமேற்கு சங்கானை



பொன்விழாத் தலைவன்
பிரபாகரனை வாழ்த்துகின்றோம்

## தர்சிகா நகைமாடம்

தங்கநகை வியாபாரம்
83/3, கஸ்தூரியார் வீதி, செம்மாதெரு யாழ்ப்பாணம்
T.P - 0776176833



பொன்விழாத் தலைவன்
பிரபாகரனை வாழ்த்துகின்றோம்

## JAFFNA TRADERS
## யாழ்ப்பாண வணிக நிலையம்

General Merchant and Commission Agent
T.P- 021 222 2806, 7480 302 (108), Hospital Road, Jaffna



குழந்தையாம் "பிரபா" தன்னைக்
கொஞ்சிய தாயின் நெஞ்சில்
கிளர்ந்தபே ரின்பம் தன்னைக்
கிறுக்கிய வார்த்தை ஏது?
வல்லவன் ஆக வளர்ந்து
வருகையில் தடைக்கல் போல...
செல்லும் வழியினிலே
சிக்கல் தரும் இனக்கலகம்
தொல்லை தரத் தொடங்க..
தூயமகன் களம் அமைத்தான்

சங்கானை, சித்தன்கேணி, சுழிபுரம்,
மூளாய், வட்டுக்கோட்டை, அராலி

## முச்சக்கர வண்டிகள் சங்கம்



பொன்விழாத் தலைவன்
பிரபாகரனை வாழ்த்துகின்றோம்
இன்றைய அறிமுகம்... நாளைய நாகரிகம்...

## அட்ஷயா ஆடையகம்

இல. 44 நவீன சந்தை, (உட்புறம்) யாழ்ப்பாணம்

## இலக்கியன் புடவையகம்

உரிமையாளர் : இ.ஸ்ரீபன்

பெற்றோரின் பாசப்பிடியறுத்து..
நற்றமிழின் மண்மீட்க...
வெற்றியதன் பாதையிலே புலிகளினை வீறுநடை
போட வைத்தார்,
மண் மீட்கப்புறப்பட்ட மறவனது
மகிமைக்காக மக்களெல்லாம் - பிரபா எனும்
தமிழீழ நாயகனை தலைவனாய் ஏற்றனர், இனி
யொரு நாள் தமிழீழம் தானே மீளும், ஒப்பரிய
"பிரபா"வின் தலைமை தன்னை ஏற்று வரும்
நாளே இந்நாள்.
ஐம்பதை எட்டிவிட்ட முத்தமிழின் காவலனை
"பல்லாண்டு வாழ்க வென செப்புகின்றேன்
இந்நாளில்



கவிதை ஆக்கம் : றெ.விஜிதா (ஆசீர்வாதப்பர் வீதி)

வலிகாமம் மேற்கு சங்கானை கிளை

## சிகை அலங்கரிப்பாளர் சங்கம்

# ஐம்பதாவது பிறந்ததின வாழ்த்துக்கள்

## தாயகம் மீட்கவென

தமிழ் மண்ணில் வந்துதித்த
தன்னிகரில்லா நம் தலைவா!
ஐம்பதாவது அகவை தனில்
அடியெடுத்து வைக்கும் உந்தனுக்கு
ஆசிகள் கூற அருகதை எமக்கில்லை
ஆயினும், உள்ளத்தில் பொங்குகின்ற
உணர்வுகளின் உந்துதலால்
வாழ்த்துகிறோம் மனம் நிறைந்து
நீடூழி வாழ்கவென்று

பிரமசாத்வீ.



## காலத்தை வென்ற காவிய நாயகன்

இவன்...
அடிமை விலங்குடைக்க
அவதரித்த நாயகன்
எம் விடியலுக்கு வழிகாட்டும்
விடிவெள்ளி போன்றவன்
முடிவில்லாத் துயரோடு
நாம் இங்கே கலங்குவதால்
இடியாகப் புறப்பட்டான்
விடுதலைக் கொடியேற்ற
ஓயாத அலையாக
ஓய்வின்றி இவன் நடந்து
அரை – நூற்றாண்டு காலத்தை
அர்ப்பணித்தான் எமக்காக
எல்லோர்க்கும் மரணமுண்டு
எதற்குமோர் எல்லையுண்டு
எம் விடியலுக்காய் அவதரித்த
இந்த வீரனுக்கு மரணமில்லை

புதுக்கவி.

அம்பிகை தொலைத் தொடர்பகம்
தானைத் தமிழ்த் தலைவரைவாழ்த்தும் இருபாலை வர்த்தகர்கள்
மலரமைப்பு சி.லோகதாஸ் இருபாலை செய்தியாளர்
சின்னத்தம்பி ஸ்ரோர்ஸ்
குமார் வெல்டிங் வேக்ஸ்
சிவா களஞ்சியம் அன் வீடியோ
யூனியன் கேவிஸ் ஸ்ரேசன்
அம்பாள் அரைக்கும் ஆலை
தனம் மல்டி பலஸ்
கேம்பிறிச் சலூன்
பவானி லோன்றி
சாள்ஸ் ஓடியோ அன் வீடியோ
லக்கி பன்சி ஹவுஸ்
லக்சுமி பவான்
ரமேஸ் ரேடியோ வேக்ஸ்
உஷா தொலைத் தொடர்பகம் கட்டைப்பிராய்
ஓசன்னா அழகுமாடம்
கரன் வீடியோ சென்ரர்
திவா சலூன்

## மாவீரர்களின் பெற்றோர் கௌரவிப்பு

கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலை ஊர்காவற்றுறை மெலிஞ்சி முனையில் மாவீரர் பெற்றோர் கௌரவிப்பு நிகழ்வு சிறப்பாக நடைபெற்றது.

மெலிஞ்சிமுனை றோ.க.பாடசாலையில் ஊரகச் செயலாளர் க.சிங்கராசா தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில் பொதுச்சுடரினை ஊர்காவற்றுறைப் பிரதேச அரசியற்துறைப் பொறுப்பாளர் ரதன், பிரதேச தேசிய எழுச்சிப் பேரவைச் செயலாளர் ஜெயா, ஊரகப் பொறுப்பாளர் சி.நிதர்சன், ம.பௌற் ஆகியோர் ஏற்றிவைத்தனர்.

மாவீரர் பொது நினைவுப் படத்திற்கு தீவகக் கோட்ட சிறப்புப் பொறுப்பாளர் ந.கண்ணன், மாவீரர் செயற்பாட்டுக் குழுத் தலைவர் ப.ஜெயக்குமார் ஆகியோர் மலர் மாலை அணிவித்தனர்.

தொடர்ந்து மாவீரர் பெற்றோர் தங்கள் பிள்ளைகளின் நினைவாக ஈகச்சுடரேற்றி, மலர் மாலை அணிவித்தனர்.

புங்குடுதீவு பிரசேத்திற்குட்பட்ட மாவீரர்களது பெற்றோர் கௌரவிப்பு நிகழ்வு கடந்த திங்கட்கிழமை புங்குடுதீவு சிறி சுப்பிரமணிய வித்தியாலய மண்டபத்தில் புங்குடுதீவு தேசிய எழுச்சிப் பேரவைச் செயலாளர் கி.விநாயகமூர்த்தி தலைமையில் இடம்பெற்றது.

பொதுச்சுடரினை ஊடகப் பேச்சாளர் ப.கனகலிங்கம் ஏற்றிவைக்க, தேசியக் கொடியினை யாழ்.மாவட்ட விளையாட்டுத்துறை பொறுப்பாளர் ஏற்றிவைத்தார்.

ஈகச்சுடரினை மாவீரர் பெற்றோர் ஏற்றிவைத்தனர்.

மாவீரர் நினைவு உரைகளை ஊடகப் பேச்சாளர் ப.கனகலிங்கம், துணைப்பொறுப்பாளர் செம்மணன், தமிழீழ அரசியல்துறை மகளிர் பிரிவு பொறுப்பாளர் தமிழினி ஆகியோர் ஆற்றினர்.

ஊர்காவற்றுறை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்திற்குட்பட்ட மாவீரர் பெற்றோர் கௌரவிப்பு நிகழ்வு கடந்த செவ்வாய்க்கிழமை பி.ப. 3.00 மணியளவில் மேற்படி சங்கப்பணியில் அதன் தலைவர் தி.சுந்தரலிங்கம் தலைமையில் நடைபெற்றது.

பொதுச் சுடரினை ஊர்காவற்றுறைப் பிரதேசப் பொறுப்பாளர் ரதன் ஏற்றிவைக்க, யாழ்.மாவட்ட சிக்கன கடனுதவிக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத் தலைவர் சிவசுப்பிரமணியம் பொது மாவீரர் படத்திற்கு மலர் மாலை அணிவித்தார்.

தேசியக் கொடியினை துணைப் பொறுப்பாளர் சி.செம்மணன் ஏற்றிவைத்தார்.

ஈகச் சுடரினை 50ற்கு மேற்பட்ட மாவீரர்களின் பெற்றோர் ஏற்றி வைத்தனர்.

வேலணை பிரதேசத்திற்குட்பட்ட மாவீரர்களின் பெற்றோர் கௌரவிப்பு நிகழ்வு கடந்த செவ்வாய்க்கிழமை காலை 10.00 மணியளவில் வேலணை கிழக்கு மகாவித்தியாலய மண்டபத்தில் சிறப்பாக நடைபெற்றது.

விசேடமாக அமைக்கப்பட்ட மண்டபத்தில் அறுபதுக்கு மேற்பட்ட மாவீரர்களின் நினைவுப்படங்கள் வைக்கப்பட்டு அஞ்சலி செலுத்தப்பட்டது.

வேலணை பிரதேச தேசிய எழுச்சிப் பேரவை செயலாளர் ம.அம்பிகைபாகன் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில், பொதுச்சுடரினை தீவகக் கோட்ட மகளிர் பிரிவு பொறுப்பாளர் சிவா ஏற்றிவைக்க, தமிழீழத் தேசியக் கொடியினை வேலணைப் பிரதேச அரசியல் துறைப் பொறுப்பாளர் யாழ்நம்பி ஏற்றிவைத்தார்.

வேலணைப் பிரதேச செயலர் மு.நந்தகோபாலன், வேலணை ம.ம.வி.அதிபர் பொ.அருணகிரிநாதன், ஊர்காவற்றுறைப் பிரதேச பொறுப்பாளர் ரதன், வேலணைப் பிரதேசப் பொறுப்பாளர் யாழ்நம்பி ஆகியோர் உரையாற்றினர்.

(க)

## மொழி பெயர்ப்பாளர் பதவிக்கு நாட்டில் 560 வெற்றிடங்கள்

(கொழும்பு)

அரசகரும மொழிகள் திணைக்களம் நாடளாவிய ரீதியில் நியமித்த 800 மொழி பெயர்ப்பாளர்களில் தற்போது 240 பேரே கடமையில் இருப்பதாகக் கூறப்படுகின்றது.

முறையான ஆட்சேர்ப்புக் கொள்கை இல்லாமை மற்றும் பயிலுநர் தரத்திலான சம்பள அளவுத்திட்டம் என்பன காரணமாகவே இந்நிலை ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதனால் நாட்டில் மொழி பெயர்ப்பாளர்களுக்கு பாரிய தட்டுப்பாடு நிலவுகின்றது.

அமைச்சுகளிலும் திணைக்களங்களிலும் இத் தட்டுப்பாடு இருப்பதனால் பல பிரச்சினைகள் எதிர் நோக்கப்படுகின்றன.

அத்துடன் நிர்வாக ரீதியாக பல பிரச்சினைகளும் எழுகின்றன. அமைச்சு மற்றும் திணைக்கள மட்டத்தில் பல பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதில் பலத்த இடர்பாடுகள் எதிர் நோக்கப்படுகின்றன.

குறைந்த சம்பள அளவுத் திட்டத்தில் பயலுநர் மொழி பெயர்ப்பாளர்கள் என்று குறிப்பிட்டு இவ் வெற்றிடங்களை நிரப்ப நடவடிக்கை எடுக்கப்படுவதால் பலர் தகுதி இருந்தும் விண்ணப்பிப்பதில்லையென தெரிவிக்கப்படுகின்றது. (க-9)

## ஐ.ம.சு.மு.அரசின் வரவு-செலவுத் திட்டம் குறித்து உலகவங்கி விமர்சனம்!

(லண்டன்)

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசின் வரவு - செலவு திட்டத்தில் பொருளாதார மறுசீரமைப்புக் கொள்கை எதனையும் வெளியிடவில்லை.

இதனால் இந்த வரவு - செலவுத்திட்டத்தினால் மக்கள் முழுமையான பயனைப் பெறுவார்கள் என தாம் எதிர்பார்க்கவில்லையென உலக வங்கியின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி பீற்றர் ஹரோல் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்து கொண்டு பேசுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் தொடர்ந்தும் இது பற்றிக் கூறுகையில்,

வரவு - செலவுத் திட்டத்தின் பற்றாக்குறையாக உள்ள 8.6 வீதத்தை வரி வசூலிப்பின் மூலம் 2005 ஆம் ஆண்டில் 7.5 வீதத்தால் குறைக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக அரசாங்கம் கூறுகிறது.

இருந்தாலும் இவ்வாறான வரி வசூலிப்பின் மூலம் இதனை முழுமையாக நடைமுறைப் படுத்தமுடியாத சந்தர்ப்பத்தில் அதாவது எதிர்ப்பார்க்கப்பட்ட வருமானம் எதிர்காலத்தில் கிடைக்காதுபோகுமானால் வரவு - செலவுத்திட்டத்தில் துண்டு விழும் தொகையை எவ்வாறு நிரப்புவது? என்றும் அவர் கேள்வி எழுப்பினார்.

அத்துடன் உலக வங்கியின் எதிர்பார்ப்புக்களுக்கு அமைய ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசின் வரவு - செலவுத்திட்டம், அமையவில்லை என்று குறிப்பிட்ட அவர்.

அரசின் வரவு - செலவுத்திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட விடயங்களை நடைமுறைப் படுத்த முடியாததொரு சந்தர்ப்பம் ஏற்பட்டால், அரசின் அடுத்த நடவடிக்கை என்ன? என்பது பற்றி அறிவதற்கு உலக வங்கி ஆவலாக இருக்கின்றது என்றும் பீற்றர் ஹரோல் தெரிவித்தார்.

(க-63)

# கிருபானந்தவாரியார் வாழ்க்கை வரலாறு

தொடர் இல 28

## காமகோடிப் பெரியவாள் சந்திப்பு



காஞ்சிபுரத்தில் ஏகாம்பரநாதர் கோவிலில் பழுதுபட்டிருந்த எட்டு மதில்களையும் திருப்பணி செய்தேன். அதனால் காமகோடி பெரியவாளுக்கு என்மீது தனிப்பட்ட ஒரு கருணை ஏற்பட்டிருந்தது. ஒருமுறை காஞ்சிபுரத்தில் இராமயண விரிவுரை செய்தேன். அதன் பூர்த்தி விழாவில் காமகோடி சுவாமிகள் 400 ரூபாய் பெறுமதியான சாதராவை அனுப்பி ஆசீர்வதித்தார்கள்

காமகோடிப் பெரியவாள் சென்னை சம்ஸ்கிருத கல்லூரிக்கு எழுந்தருளியிருந்தார்கள். நான் அவரைத் தரிசிக்க எண்ணினேன். மயிலாப்பூர் மாதவப்பெருமாள் கோயில் இராஜ கோபுரத்திருப்பணிக்கு இருமுறை தொடர் விரிவுரை செய்து உதவினேன். அதனால் அந்தக் கோயில் அறங்காவலர் துரைஸ்வாமி ஐயங்கார் எனக்கு மிகவும் வேண்டியவராக இருந்தார். அந்த துரைஸ்வாமி ஐயங்காரைச் சமயம் தெரிந்து வருமாறு அனுப்பினேன். அவர் போய் தெரிந்துகொண்டு வந்து நாளை மாலை 3 மணிக்கு சுவாமிகளைத் தரிசிக்கப் போக வேண்டுமென்றார்.

மறுநாள் மாலை 3 மணிக்கு சம்ஸ்கிருத கல்லூரிக்குச் சென்றேன். அங்கிருந்த மடத்து காரியஸ்தர் "பெரியவாள் நீங்கள் வந்திருக்கிறீர்களா? என்று இரண்டு மூன்று முறைகேட்டுவிட்டார். சீக்கிரமாகப் போங்கள்'' என்றார். நான் விரைந்துசென்றேன். அங்கே சுவாமிகள் குளிப்பதற்கென்று வெட்டியிருக்கின்ற மணல் கேணிக்கருகே சுவாமிகள் அமர்ந்திருந்தார்.

"நீங்கள் விழுந்து வணங்கக்கூடாதாம். இது சுவாமிகளின் கட்டளை" என்று மடத்துக் காரியஸ்தர் என்னிடம் கூறினார். நான் சுவாமிகளைக் கண்டு அடியற்ற மரம்போல் வீழ்ந்து அஷ்டாங்க நமஸ்காரம் செய்தேன். சுவாமிகள் என்னைப் பார்த்து "நீ மார்பில் சிவலிங்கம் தரித்துக் கொண்டிருக்கிற வீரசைவன். விழுந்து வணங்கினால் லிங்கமும் கீழேவிழும். அதனால் வீழ்ந்து வணங்கக்கூடாதென்று சொல்லியிருந்தேனே? அவர்கள் சொல்லவில்லையா? என்று கேட்டார். நான் மௌனமாக நின்று கொண்டிருந்தேன்.

சுவாமிகள் என்னைப் பார்த்து "உன்னுடைய தம்பி திருமாமணாளன் சௌக்கியமா?" என்று கேட்டார். இதைக்கேட்டு ஆச்சரியம் அடைந்தேன். 25 ஆண்டுகளுக்கு முன் மின்னல் என்ற ஊரில் என் தம்பி திருமாமணாளன் தேவாரம், திருப்புகழ் மாணவர்களுக்குக் கற்பித்துக்கொண்டிருந்தான். காமகோடிப் பெரியவாள் அந்த ஊரில் தங்கியிருந்தார். அவருடைய பூசையில் என்னுடைய தம்பி திருமாமணாளன் தேவாரம், திருப்புகழ் பாடினான். அங்கிருந்தவர்கள் "இவர் வாரியார் தம்பி திருமாமணாளன்" என்று சுவாமிகளிடம் அறிமுகம் செய்து வைத்தார்கள். இந்த ஒருமுறைதான் சுவாமிகள் தம்பியைச் சந்தித்தது. அதற்கப்பால் சந்திக்கவேயில்லை. தம்பியின் பெயரும் பத்திரிகையில் வரக்கூடிய அத்துணை பிரபலமானதன்று. தம்பியின் பெயரை, பழகியவர்களே திரு என்று சொல்லை அடைமொழி என்று கருதிக்கொண்டு மாமணாளன் என்று சொல்லுவார்கள். 25 ஆண்டுகளுக்குப்பின் சுவாமிகள் "திருமாமணாளன் சுகமா?" என்று வினவிய அந்த நினைவு ஆற்றலை நினைந்து விம்மிதம் அடைந்தேன்.

நான் அங்கு வந்திருப்பதையறிந்த கலைமகள் ஆசிரியர் கி.வா.ஜ.அவர்கள் அங்கு வந்தார். சுவாமிகளிடம் என்னை அறிமுகம் செய்யத்தொடங்கி "இவர் வயலூர் திருப்பணி செய்தார்..." என்றெல்லாம் அடுக்கிச் சொன்னார். சுவாமிகள் பொறுமையாகக் கேட்டுக் கொண்டு சிரித்துக்கொண்டே "எல்லாம் கூறினாயே! உங்கள் ஊரில் செய்த திருப்பணியைச் சொல்லவில்லையே! என்று கேட்டு அவரை மடக்கினார். அவர் ஊர் என்பது மோகனூர். மோகனூரில் 1939ல் ஒரு மூட்டை சிமெண்டு 15 அணா என்று விற்றபொழுது ஒரு லட்சம்ரூபாய் செலவில் அருணகிரிநாதர் அறச்சாலைத் திருப்பணி செய்தேன். அவ்வழியே சென்ற சுவாமிகள் அந்த அறச்சாலையில் தங்கிப் பூசை செய்தார். அதைத்தான் அப்படிக் குறிப்பிட்டு "வாரியாரைப்பற்றி உன்னைவிட எனக்கு அதிகம் தெரியும்" என்பதைச் சொல்லாமல் சொல்லி அருளினார். பின்னர் பல விஷயங்களைப்பற்றி உரையாடினார். நான் சுவாமிகளிடத்தில் விடைபெற்றுக்கொண்டு திரும்பினேன். காஞ்சிபுரத்தில் பணிபுரிந்துகொண்டிருந்த ஸப்ரிஜிஸ்தார் பெரியண்ணன் என்பவர் காஞ்சிபுரத்தில் (1008 பஜனைகள் கூடிய) ஒரு விழாவிற்கு ஏற்பாடு செய்தார். அதற்குத் தலைமை தாங்க காமகோடிப் பெரியவாளை அழைக்க வேண்டுமென்று விரும்பினார். அப்பொழுது சுவாமிகள் சென்னைக்கு அருகிலேயுள்ள ஊரில் முகாம் செய்திருந்தார். நானும் பெரியண்ணனும் அங்கு சென்றோம். அங்கு உரித்துப்போட்ட தேங்காய் நார் குப்பையின்மேல் சுவாமிகள் அமர்ந்திருந்தார். அது அவருடைய எளிமையை உணர்த்தியது. மகாநாட்டைத் தலைமை தாங்கி நடத்திக்கொடுக்குமாறு வேண்டினோம். சுவாமிகள் இசைந்தருளினார்கள். அப்பொழுது சுவாமிகளுக்குச் சற்று உடல் நலக்குறைவு. மடத்து அன்பர்களுக்கு அதில் விருப்பமில்லை. சுவாமிகளின் விருப்பத்தை யாரால் தடுத்து நிறுத்த முடியும்?

காஞ்சிபுரத்தில் 1008 பஜனைகள் ஒன்று சேர்ந்தன. விடியற்காலை 4 மணிக்குத் தொடங்கி காந்திசாலை வழியாக ஏகாம்பரநாதர் கோவிலுக்குப்போய் காமாட்சி கோயிலில் முடித்து விட வேண்டும் விடியற்காலை 4 மணிக்கே சுவாமிகள் வரதராஜப் பெருமாள் கோவிலுக்கு வந்து விழாவினைத் துவக்கிவைத்தார்கள். இடையிலும் காந்தி சாலையில் வந்து கலந்து கொண்டார்கள்.

பகல் 3 மணிக்கு மகாநாட்டிற்குத் தலைமை தாங்கினார்கள். அம் மகாநாட்டில் ஒரு இருபது பேர் பேச ஏற்பாடு செய்திருந்தது. அப்பொழுது இருந்த அறநிலைய ஆட்சி ஆணையர் உத்தண்டராமப் பிள்ளையும் கலந்துகொண்டார்.

மகாநாட்டில் பேசுபவர்கள் பழைய வரலாறுகளைக் கூறாமல் தங்கள் வாழ்நாளில் கனவிலோ, நனவிலோ இறைவனுக்கும் தங்களுக்கும் உண்டான தொடர்புகளைக்கூற வேண்டும் என்று விதிக்கப்பட்டிருந்தது.

சரியாக பகல் 3 மணிக்கு மகாநாடு தொடங்கியது. காமகோடிப்பெரியவாள் தலைமை தாங்கி, தலைமைப் பேருரையாக திருக்கள் வீரப்ப சுவாமிகளுடைய அனுபவத்தை எடுத்துக்கூறினார். அடுத்து என்னுடைய பேச்சு. நான் எழுந்துநின்று பெரியவாளுக்கு வணக்கம் செய்து பேச ஆரம்பித்தேன். "பரமஞான மூர்த்தியாகிய காமகோடிப் பெரியவாள் தனக்கு ஏற்பட்ட அனுபவங்களில் ஒன்றைக்கூட சொல்லவில்லை. சிறியேன் என்னுடைய அனுபவங்களை எவ்வாறு கூறுவேன்!" என்று அவையடக்கமாகச் சொன்னேன்.

சுவாமிகள் என்னை நிமிர்ந்து பார்த்து "வேறு என்ன சொல்ல வேண்டும்? உனக்கு வருகின்ற வருவாயில் ஓர் அணாகூட உனக்கென்று எடுத்துக்கொள்ளாமல் அத்தனையும் அறப்பணிக்கு அள்ளி வழங்குகின்றாயே! இது தெய்வானுக்ரஹம் அல்லவா? அந்த அநுபவத்தைச் சொல்லு. அது ஒன்றே போதும்" என்று உரத்த குரலில் கூறினார். அவருடைய திருமுன் ஒலிபரப்பும் கருவி இருந்ததனால் அவர் சொன்னதே எல்லோருக்கும் கேட்டது. இந்த உண்மை எனது மனைவிக்கும் தெரியாத ஒன்று. எங்கே இருக்கின்ற பரமஞானியாகிய அவர் இதனை உணர்ந்து உரைக்கின்றாரே என்று நான் இறும்பூது எய்தினேன். பின்னர் வயலூரில் அருணகிரிநாதர் கனவிலே வந்து காட்சிதந்த கருணையைக் கழறினேன். பலரும் தங்களுக்குண்டான அனுபவத்தைக் கூறினார்கள். (தொடரும்)

## கார்த்திகைத் தீபமதன் கருத்து!

யான் பெரியன் என்னைப்போல் யாருமே ஈங்கில்லை
நான் முகனும் நாரணனும் நாக்கடித்தார்-தோன்று சிவன்
காண்பரிய பேரொளியைக் காட்டிப் பொருளுரைத்த
மாண்பினை நாம் போற்றுவோம்.

தன்னை யுணர்ந்து செருக்கடங்கி வாழ்ந்திடுதல்
நன்மை பல செய்யும் ஞானவழி-என்பதையே
கார்த்திகைத் தீபம் கருத்தாகக் கொண்டுளதைத்
தேர்ந்தே நன்கு தெளிவோம்.

அண்ணாமலை மேல் அணையா தெழுஞ்சுடரை
எண்ணா திருப்போரும் ஈங்குளரோ-கண்ணாரக்
கண்டு கருத்துணர்ந்து கைகூப்பிக் காலமெலாம்
தொண்டு பல செய்து துதிப்போம்.

-சிற்பி

## குற்றச்செயல்களைக் கட்டுப்படுத்த நீதிபதிகளின் ஆலோசனை பெறப்படும்

(கொழும்பு)

நாட்டில் அதிகரித்துவரும் குற்றச்செயல்களைக் கட்டுப்படுத்துவதற்காக புதிய சட்டதிட்டங்களை அமுல்படுத்தும் போது நீதிபதிகளின் ஆலோசனையைப் பெற்றுக்கொள்வதெனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் நடைபெற்ற பாராளுமன்றத் தெரிவுக்குழுக்கூட்டத்திலேயே இத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

நீதியமைச்சர் ஜோன் செனவிரத்ன தலைமையில் இடம்பெற்ற இக் கூட்டத்தில், அடுத்தமாதம் 2,3,ஆம் திகதிகளில் மீண்டும் தெரிவுக்குழு கூடும்போது நீதிபதிகளை அழைத்து இதுகுறித்து கருத்துக்களை அறிவது என்று முடிவுஎடுக்கப்பட்டுள்ளது.

குற்றச் செயல்களைத் தடுப்பதற்காகவும் அவற்றைக் கட்டுப்படுத்துவதற்காகவும் தற்போதுள்ள சட்டம் போதியதாக இல்லை என நீதியமைச்சர் ஜோன் செனவிரத்ன அதில் சுட்டிக்காட்டியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

(ந-4)

## கிளி.மாவட்டத்தில் ஆயிரக்கணக்கான குடும்பங்கள் வெள்ளத்தினால் இடப்பெயர்வு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் தொடர் மழை காரணமாக பல்வேறு இடங்களில் ஏற்பட்டுள்ள வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டு ஆயிரக்கணக்கான குடும்பங்கள் இடம்பெயர்ந்துள்ளன.

இடம்பெயர்ந்தவர்கள் பாடசாலைகளிலும் பொது இடங்களிலும் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

கிளிநொச்சி மாவட்டத்தில் கரைச்சி உதவி அரசாங்க அதிபர் பிரிவில் 3ஆயிரத்து 729குடும்பங்கள் இடம்பெயர்ந்துள்ளன. இக் குடும்பங்களில் அநேகமானவை பரந்தன் றோமன் கத்தோலிக்கத் தேவாலயத்திலும், வட்டக்கச்சி மகா வித்தியாலயத்திலும் தங்க வைக்கப்பட்டுள்ளன.

பூநகரி உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள நாச்சிக்குடாவில் 200வீடுகள் வெள்ளத்தினால் பெரிதும் சேதமடைந்துள்ளன.

முழங்காவில் ஆயிரம் வீட்டுத் திட்டத்திலுள்ள 60 வீடுகளின் சுவர்கள் இடிந்து வீழ்ந்துள்ளன.(ந-4)







மாவீரர் தினத்தை ஒட்டி லெப். கேணல் இம்ரான்-பாண்டியன் படையணியின் யாழ்.மாவட்ட மாவீரர்கள் நினைவாக கொக்குவிலில் நேற்றையதினம் இடம்பெற்ற விஷேட நிகழ்வில் யாழ். மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி கொக்குவில் இந்துக்கல்லூரி அதிபர் கமலநாதன் ஆகியோர் உரையாற்றுவதையும் நிகழ்வில் கலந்துகொண்டவர்களில் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம்.

(படங்கள்:-சிவசங்கர்)

# சாம்சுங் தரவரிசைப் பட்டியல் வாஸ், கும்ளே முதலிடத்தில்

சாம்சுங் நிறுவனம் அண்மையில் வெளியிட்டுள்ள தரவரிசைப் பட்டியலில் வாஸ், கும்ளே ஆகியோர் முதலிடத்தில் உள்ளனர். ஒருநாள் கிரிக்கெற் தரவரிசைப் பட்டியலில் பந்துவீச்சில் இலங்கையின் வேகப்பந்து வீச்சாளர் சமிந்தவாஸ் 159 புள்ளிகளைப் பெற்று முதல் இடத்தைப் பிடித்துள்ளார்.

அதேநேரம் டெஸ்ட் தரவரிசைப் பட்டியலில் இந்திய அணியின் சுழற்பந்துவீச்சாளர் அனில்கும்ளே முதலிடத்தைப் பிடித்துள்ளார்.

199புள்ளிகளைப்பெற்று கும்ளே, இங்கிலாந்து அணியின் ஸ்டீவ் ஹார்மீஸனை முந்தி முதல் இடத்தைப் பெற்றுள்ளார். ஹார்மீஸன் 190 புள்ளிகளுடன் இரண்டாவது இடத்துக்குப் பின்தள்ளப்பட்டுள்ளார். இதேவேளை உலக சாதனை வீரரான அவுஸ்திரேலியாவின் ஷேன்வோர்ன் 151 புள்ளிகளுடன் மூன்றாவது இடத்தில் உள்ளார்.

இத்தரவரிசைப் பட்டியலில் டெஸ்ட் போட்டிகளுக்கான துடுப்பாட்ட வரிசையில் மேற்கிந்திய தீவுகள் அணியின் தலைவர் பிரையன்லாரா 138 புள்ளிகளுடன் முதலிடத்திலும், இலங்கை அணியின் அதிரடிவீரர்களான சனத் ஜெயசூரிய 130 புள்ளிகளுடன் இரண்டாம் இடத்திலும், குமார் சங்ககார 129 புள்ளிகளுடன் மூன்றாம் இடத்திலும் உள்ளார்.

ஒருநாள் போட்டிகளுக்கான துடுப்பாட்டப் பட்டியலில் அவுஸ்திரேலிய அணியின் அன்ரூ சைமண்ஸ் முதலிடத்தைப் பெற்றுள்ளார். அத்துடன் அணிகளுக்கான தரவரிசைப்பட்டியல் உலக சம்பியனான அவுஸ்திரேலிய அணி தொடர்ந்தும் இரு போட்டிகளிலும் முதலிடத்தைப் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(7-4)

# அரசியல் சார்ந்த நிருபர்களுக்கு விசா வழங்க சிம்பாப்வே மறுப்பு

சிம்பாப்வேயில் இன்று இங்கிலாந்து அணிக்கெதிரான ஒருநாள் போட்டித் தொடர் ஆரம்பமாகவுள்ள நிலையில், இங்கிலாந்துப் பத்திரிகையாளர்கள் 13 பேருக்கு விசா வழங்க சிம்பாப்வே மறுப்புத் தெரிவித்திருக்கிறது.

பிரிட்டிஷ் தொலைக்காட்சி மற்றும் பத்திரிகைச் செய்தியாளர்கள் 36பேர் விசாவிற்காக விண்ணப்பித்திருந்த போதும் 23 பேருக்கு மாத்திரமே விசா அனுமதியை சிம்பாப்வே செய்தித்துறை வழங்கியுள்ளது.

பிரிட்டனின் அரசியல் சார்ந்த பத்திரிகை மற்றும் தொலைக்காட்சி நிருபர்களுக்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளதாகவும், அரசியல் சாராதவர்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதாகவும் சிம்பாப்வேயின் செய்தித்துறை செயலாளர் ஜோர்ஜ் சரம்பா தெரிவித்திருக்கிறார். நடைபெறவுள்ள கிரிக்கெற் விளையாட்டேயன்றி அரசியல் விளையாட்டல்ல என காட்டமாகத் தெரிவித்திருக்கிறார் செய்தித்துறை செயலாளர்.

பி.பி.சி.டைம்ஸ், டெலிகிராப், சன் மிரர் மற்றும் இப்பத்திரிகைகளின் வாராந்த இதழ்களுக்கும் அனுமதி மறுக்கப்பட்டிருக்கிறது.

ரொயிட்டர், பிரஸ் அசோசியேசன், கார்டியன், இண்டிபெண்டி, டெய்லி எக்ஸ்பிரஸ், டெய்லி மெயில் ஆகியவை உட்பட பலவற்றின் நிருபர்களுக்கு அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது. ஆயினும் இத்தடை காரணமாக போட்டி நடைபெறுவதில் பாதிப்பு இருக்காது என இங்கிலாந்து மற்றும் வேல்ஸ் கிரிக்கெற் சபைத் தலைவர் டேவிட் மோர்கன் தெரிவித்திருக்கிறார்.

அதேநேரம் சர்வதேச கிரிக்கெற் பேரவையின் சட்ட விதிகளின்படி ஒரு நாட்டில் நடைபெறும் கிரிக்கெற் போட்டிகளுக்கு விண்ணப்பிக்கும் அனைத்து ஊடகங்களுக்கும் அனுமதி வழங்க வேண்டுமென்ற நியதி இல்லை எனவும் கூறப்படுகிறது.

இங்கிலாந்து அணி திட்டமிட்டபடி சிம்பாப்வேக்கான சுற்றுப்பயணத்தை மேற்கொள்ளாவிட்டால் 2 மில்லியன் அமெரிக்க டொலரை சர்வதேச கிரிக்கெற்சபைக்கு அபராதமாக செலுத்தவேண்டுமென ஐ.சி.சி. தெரிவித்திருக்கிறது.

சிம்பாப்வேக்கான சுற்றுப்பயணத்தை இரத்துச்செய்யுமாறு தமது அணிக்கு தாம் கூறவில்லையென பிரிட்டன் விளையாட்டுத்துறை அமைச்சர் நிச்சர்ட்ஹெவாட் தெரிவித்திருப்பது குறிப்பிடத்தக்கது. (7)

# இலங்கையணி முகாமையாளராக பிரண்டன் குறுப்பு நியமனம்

அடுத்த மாதம் நடைபெறவுள்ள இலங்கை நியூசிலாந்து அணிகளுக்கிடையிலான கிறிக்கெற் சுற்றுத் தொடருக்கு, இலங்கை அணியின் முகாமையாளராக பிரண்டன் குறுப்பு நியமிக்கப்பட்டிருக்கின்றார்.

ஜனவரி மாதம் நிரந்தர அணி முகாமையாளர் நியமிக்கப்படும் வரை அவ் தற்காலிக முகாமையாளராக கடமையாற்றுவாரென ஸ்ரீலங்கா கிறிக்கெற் சபை அறிவித்துள்ளது.

கடந்த ஒக்டோபர் மாதம் இலங்கை அணி பாகிஸ்தானுக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்ட போது அவர் முகாமையாளராக கடமையாற்றினார் என்பது குறிப்பிடத்தக்கது.

பிரண்டன் குறுப்பு 1988 ஆம் ஆண்டு தொடக்கம் 91 ஆம் ஆண்டு வரை இலங்கைக்காக 4 டெஸ்ட் போட்டிகளில் விளையாடியிருக்கிறார். டெஸ்ட் வரலாற்றில் மிகவும் மெதுவாக இரட்டைச்சதமடித்த சாதனையை அவர் ஏற்படுத்தியிருக்கிறார்.

டிசம்பர் 21 ஆம் திகதி ஆரம்பமாகும் நியூசிலாந்து சுற்றுத்தொடரில் 2 டெஸ்ட் போட்டிகளும் 5 ஒருநாள் போட்டிகளும் நடைபெறும். (7)

# சேவை பணிகளுக்கு நிதி திரட்ட மாரத்தான் சட்டத்தில் சச்சின், அஞ்சலி

மும்பையில் மாரத்தான் ஓட்டத்தில் சச்சின் டெண்டுல்கர் தனது மனைவி அஞ்சலியுடன் பங்கேற்கவுள்ளார்.

சேவை நோக்கோடு நடத்தப்படும் இந்த ஓட்டத்தில் அஜித் அகார்கர், வினோத் காம்ளி உட்பட ஏராளமான பிரபலங்கள் கலந்து கொள்ள விருக்கின்றார்.

பல்வேறு சேவை பணிகளுக்கு நிதி திரட்டுவதற்காக மும்பையில் மாரத்தான் ஓட்டம் வரும் ஜனவரி மாதம் 16 ஆம் திகதி நடைபெறவுள்ளது. இதில் நமது நட்சத்திர கிரிக்கெட் வீரர் சச்சின் தனது மனைவி அஞ்சலியுடன் கலந்து கொள்வார். இவர்கள் இருவரும் சேர்ந்து 1 லட்சம் ரூபாய் வரை நிதி வசூலித்துக் கொடுக்க இருப்பதாக அஞ்கலியின் தாயார் அனபெல்லா மேத்தா தெரிவித்தார்.

இந்த மாரத்தான் ஓட்டத்தை வெற்றிகரமாக நடத்த மகாராஷ்டிர மாநில கவர்னர் முகமது பசல் உறுதி கொண்டுள்ளார். தனிப்பட்ட முறையில் 7 ஆயிரம் ரூபாய் உதவி அளித்துள்ள இவர் கவனர் நிவாரண நிதியில் இருந்து 11 ஆயிரம் ரூபாய் அள்ளிக் கொடுத்துள்ளார்.

கடந்த ஆண்டு மும்பையில் நடந்த மாரத்தான் போட்டியின் போது ஒரு கோடி ரூபாய்க்கும் மேல் வலானது அம்முறை இதே போல ஐந்து மடங்கு நிதி திரட்டமிடப்பட்டுள்ளது. கிரிக்கெட் வீரர்கள் தவிர ஆனந்த் மகேந்திரா, முகேஷ் அம்பானி போன்ற தொழில் அதிபர்களும் ஓட்டத்தில் பங்கேற்க விருப்பம் தெரிவித்துள்ளனர். (07)

## விளையாட்டு செய்திகள்

# உலக ஆணழகன் போட்டி பெங்களூரில் நடைபெறும்

உலக அமெச்சூர் ஆணழகன் போட்டி, நாளை சனிக்கிழமையும் ஞாயிற்றுக்கிழமையும் பெங்களூரில் நடைபெறவுள்ளது.

20 நாடுகளில் இருந்து ஏறக்குறைய 200பேர் பங்கேற்கும் இப்போட்டி இந்தியாவில் நடைபெறுவது இதுவே முதல் தடவை என தேசிய அமெச்சூர் ஆணழகன் பெடரேசன் பொதுச் செயலர் எஸ்.சந்திரமௌலி தெரிவித்திருக்கிறார். ஜேர்மனி, பெல்ஜியம், ஸ்பெயின் கிரீஸ், நோர்வே, ஹொலந்து பின்லாந்து, லத்துவியா, டென்மார்க் ரஷ்யா, சுவிட்சர்லாந்து, சுவீடன், இங்கிலாந்து உள்ளிட்ட நாடுகளில் இருந்து ஆணழகர்கள் இப் போட்டியில் கலந்து கொள்ளவுள்ளனர். (து-7)

# மறக்க முடியுமா?

## ஜாம்பவான் அணியில் வேதாளங்கள்

ஜாம்பவான் அணி என வர்ணிக்கப்படும் மேற்கிந்திய அணியின் சிறந்த வீரர்களை சென்றவாரம் பார்த்தோம்

இவ்வாரம் மேற்கிந்திய அணியை வெற்றிப்பாதைக்கு இட்டுச்சென்ற அணித்தலைவர்களை நினைவு கூருவோம்.

அணித்தலைவர்களைப் பொறுத்தவரை பிரையன்லாரவுக்கு ஒரு சிறப்பு உண்டு. மேற்கிந்திய கிரிக்கெற் அணி வரலாற்றில் ஜோன் கோட்டாருக்கு அடுத்து (1950ஆம் ஆண்டு) லாரா மட்டுமே இரண்டு தடவை அணித் தலைவராக இருக்கிறார்.

மேற்கிந்திய அணிஎன்றாலே பலரும் அச்சம் கொள்ளக்கூடியளவிற்கு அதை உருவாக்கிய பலர் கிரிக்கெற் ரசிகர்களால் மறக்க முடியாதவர்களாகக் காணப்படுகின்றார்கள். JOHN GODDARD (ஜோன் கோடார்ட்)

மேற்கிந்திய கிரிக்கெற் அணிக்கு முதன் முதலாக தலைமைப்பதவியை வசித்த பெருமை இவரையே சாரும்.

1947ஆம் ஆண்டு உருவான மேற்கிந்திய கிரிக்கெற் அணிக்கு தலைமை தாங்கிய இவர் அவ்வாண்டு அவுஸ்திரேலியாவில் இடம்பெற்ற டெஸ்ட் தொடரில், 4:1என்ற கணக்கில் மேற்கிந்திய அணி தோல்வியைத் தழுவிய காரணத்தால் பதவியிலிருந்து நீக்கப்பட்டார்.

அதன்பிறகு ஜெப்ரி ஸ்டொல்மேயர் (JEFFREY STOLLMEYER) மேற்கிந்திய அணிக்குத் தலைமை வகித்தார். 1957ஆம் ஆண்டு ஜெரி அலக்சாண்டர் (GERRY ALEXANDER) தலைமையில் மேற்கிந்திய அணி 30 என்ற கணக்கில் தோல்வியைத் தழுவியதும் மீண்டும் கோட்டார்ட் தலைவராக நியமிக்கப்பட்டார்.

GARRY SOBERS (ஹெரி சோபர்ஸ்) மேற்கிந்திய கிரிக்கெற் வரலாற்றில் சிறந்த தலைமைத்துவத்திற்கும் டெஸ்ட் துடுப்பாட்டத்திற்கும், பந்துவீசுவதற்கும் உதாரணமாகக் கொள்ளப்படுபவர் சோபர்ஸ்.

1965ஆம் ஆண்டு பிராங் வொரலுக்கும் பிறகு (FRANK WORRALL) மேற்கிந்திய அணிக்கு தலைமை வகித்தார் சோபர்ஸ். அவுஸ்திரேலிய அணியுடன் 2:1, இங்கிலாந்துடன் 3:1, இந்தியாவுடன் 2:0என்ற கணக்கில் டெஸ்ட் தொடரை மேற்கிந்திய அணி வெல்ல அவர் காரணமாக இருந்தார்.

1973ஆம் ஆண்டுவரை தலைமைப்பதவி வகித்தார் சோபர்ஸ். அதன் பிறகு பிரபல வீரர் ரொகான் கன்ஹாய் (ROHAN KANHAI) தலைமைப்பதவி ஏற்றார். 1974ஆம் ஆண்டில் சோபர்ஸ் ஓய்வுபெற்றார்.

டெஸ்ட் போட்டி ஒன்றில், அதிகூடிய தனிநபர் ஓட்டங்களான 365 (ஆட்டமிழக்காமல்) ஓட்டங்களைப் பெற்ற சோபர்ஸின் சாதனையை மேற்கிந்திய வீரர் லாரா முறியடித்த சந்தர்ப்பத்தில் மைதானத்திற்கே வந்திருந்து லாராவை வாழ்த்தினார் அவர்.

1994ஆம் ஆண்டு இங்கிலாந்துக்கு எதிராக சென்.ஜோன்ஸ் மைதானத்தில் இடம்பெற்ற போட்டியிலேயே லாரா இச்சாதனையைப் படைத்தார்.

அதன்பின் கடந்த வருடம் அவுஸ்திரேலிய வீரர் மத்தியூஹேடன் சிம்பாப்வே அணிக்கெதிராக 380 ஓட்டங்களைப்பெற்றதும் இவ்வருடம் லாரா இங்கிலாந்து அணிக்கெதிராக சென்ஜோன்ஸ் மைதானத்திலேயே 400 ஓட்டங்களை ஆட்டமிழக்காமல் பெற்றதும் பலருக்கு நினைவிருக்கலாம்.

ROHAN KANHAI (ரொகான் கன்ஹாய்) சோபர்ஸுக்குப்பிறகு மேற்கிந்திய அணியின்தலைமைப்பொறுப்பை 1973ஆம் ஆண்டு ஏற்றவர் கன்ஹாய்.

13 டெஸ்ட் போட்டிகளை தலைமை தாங்கி வழிநடாத்திய இவருக்கு மூன்று போட்டிகளில் வெற்றியும் மூன்றில் தோல்வியும் கிடைத்தன. ஏழு போட்டிகள் வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தமை 1974ஆம் ஆண்டு கிளைவ் லொயிவ் இவருக்குப் பின் தலைமைப்பொறுப்பை ஏற்றார்.

(தொடரும்)

நன்றி இணையத்தளம்

# மேற்கிந்திய அணிக்குள் சர்ச்சை

எதிர்வரும் ஜனவரிமாதம் அவுஸ்திரேலியாவில் நடைபெறவுள்ள மும்முனை ஒருநாள் சர்வதேசக் கிரிக்கெற் போட்டியில் கலந்து கொள்ளும் மேற்கிந்திய அணி தொடர்பாக பல்வேறு சர்ச்சைகள் தோன்றியுள்ளன.

மேற்கிந்திய அணியின் தலைவரும் நட்சத்திர வீரருமான பிரையன்லாரா உள்ளிட்ட 16 முக்கிய வீரர்கள் சுற்றுப்பயணக் குழாமில் இருந்து நீக்கப்படக்கூடிய சாத்தியம் தற்போது காணப்படுகிறது. விளம்பர அனுசரணையாளர்களுடன் மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்த சர்ச்சைகள் காரணமாகவே இந்த நிலை ஏற்பட்டுள்ளது.

அணி வீரர்களின் தனிப்பட்ட விளம்பர ஒப்பந்தங்களுக்கும் மேற்கிந்தியக் கிரிக்கெற் கட்டுப்பாட்டுச் சபையின் பிரதான அனுசரணையாளருடனான ஒப்பந்த விதிமுறைகளுக்கும் இடையே முரண்பாடுகள் காணப்படுவதாகத் தெரியவருகிறது.

கடந்த செப்டம்பர் மாதம் சர்வதேசக் கிரிக்கெற் பேரவையின் சம்பியன் கிண்ண ஒருநாள் தொடரைக் கைப்பற்றியது முதல் பல்வேறு அனுசரணையாளர்கள் மேற்கிந்திய கிரிக்கெற் அணி வீரர்களுடன் புதிய ஒப்பந்தங்களை மேற்கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

அடுத்த மாதத்திற்குள் இப்பிரச்சினை தீர்க்கப்படாவிட்டால் அவுஸ்திரேலியாவில் நடைபெறும் ஒருநாள் சர்வதேசத் தொடருக்கு மாற்று அணியொன்றினைத் தெரிவு செய்ய உத்தேசித்திருப்பதாக மேற்கிந்தியக் கிரிக்கெற் கட்டுப்பாட்டுச் சபை தெரிவித்திருந்தது. தற்போது சிரேஷ்ட வீரர்களில் 9பேர் மட்டுமே பயிற்சிக்காக அழைக்கப்பட்டிருப்பதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. லாரா உட்பட பல முன்னணி வீரர்கள் அழைக்கப்படவில்லை. என்பது குறிப்பிடத்தக்கது.

(7-4)



மஞ்செஸ்ரர் யுனைட்டட் அணிக்கும் லியோன் அணிக்குமிடையில் நடைபெற்ற உதைபந்தாட்டப் போட்டியில் மஞ்செஸ்ரர் அணி 2:1 என்ற கோல் அடிப்படையில் லியோன் அணியை வென்றது. இப் போட்டி உதைபந்தாட்ட போட்டி அமைப்பாளரும் மஞ்செஸ்ரர் யுனைடெட் அணியின் முகாமையாளருமான சேர்.அலக்ஸ் பேர்குஸன் பொறுப்பேற்று நடாத்தும் 1000ஆவது போட்டி என்பது குறிப்பீடத்க்கது.

சூழும் குடியும் ஒருங்கிழக்கும் கோல்கோடிச்
சூழாது செய்யும் அரசு - குறள்

வலம்புரி

## குழம்பிப்போன நாடு அமைதிக்கான வழி எது?

நாட்டில் நிர்வாகம் சீர்குலைந்து போயுள்ளது. எந்தநேரத்திலும் எதுவும் நடக்கலாமென்ற அளவில் மக்கள் ஏக்கத்துடன் இருக்கின்றனர்.

நாட்டின் நிர்வாகத்தை வழிப்படுத்தும் நாடாளுமன்றமே குழம்பிப் போயுள்ளது. நாடாளுமன்ற உறுப்பினர்கள் என்றும் இல்லாதவாறு குழப்பத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இவையெல்லாம் எதனைக்காட்டிநிற்கின்றது? இலங்கைமுழுவதிலுமே குழப்பம் சூழ்ந்துவிட்டது. கட்டுப்படுத்துவதற்கு ஓர் திடமான அரசு இல்லை. இதனையல்லவா நாடாளுமன்ற நிகழ்வுகள் நமக்கு உணர்த்துகின்றன.

இவையொருபுறம், மறுபுறத்தில், யுத்தநிறுத்த உடன்படிக்கையை கடைப்பிடிப்பதில் இராணுவத்தினரிடையே ஓர் பொதுவான கொள்கை இல்லை. தளபதிகளுக்கு தளபதிகள் வேறுபட்ட கொள்கையுடன்செயற்படுகின்றனர். இங்குதான் படையினருக்கும், விடுதலைப்புலிகளுக்குமிடையே கசப்புநிலை ஏற்படுகிறது.

கட்டளைத் தளபதிகள் சிலர் புலிக்கொடி ஏற்றுவதற்கு தமது பூரண ஆதரவை வழங்குகின்றனர். தமிழர் பகுதியில் புலிக்கொடி ஏற்றுவதில் என்ன தவறு? விடுதலைப்புலிகளுடன் உடன்படிக்கை செய்ததன் காரணமாகவே இன்று நாட்டில் அமைதி நிலவுகின்றது. தென்னிலங்கை மக்கள் நிம்மதியாக உலாவுவதற்கு கூடவிடுதலைப் புலிகளின் சமாதான விருப்பே காரணம்.

அவர்கள் யுத்தத்தை தொடர்ந்து விரும்புவார்களாயின் தமது தரப்பில் எத்தனையோ பேருக்கு தேகாந்த நிலையில் சம்பளம் கொடுக்கவேண்டியிருக்கும். இது புலிக்கொடி ஏற்றப்படுவதை ஏற்றுக் கொள்ளுகின்ற கட்டளைத் தளபதிகளின் நிலைப்பாடு.

ஆனால், தமிழர் தாயகத்தில் புலிக்கொடி ஏற்றுவதை விரும்பாத - அதனை தடுக்கின்ற இராணுவத்தளபதிகளும் இருக்கவே செய்கின்றனர்.

அவர்களைப் பொறுத்தவரை இது பௌத்த சிங்கள நாடு - இங்கு தமிழர்களுக்கு எந்த உரிமையும் கிடையாது- சிங்களவர்கள் இட்டதே சட்டம். இவ்வாறு நினைக்கின்ற இராணுவத் தளபதிகளே ஆபத்தானவர்கள். சமாதானத்தை குழப்புவதில் இவர்களின் செயற்பாடே முதன்மை பெற்றுள்ளது. இத்தகைய மனோநிலை உடைய இராணுவத் தளபதிகளால் எல்லா மக்களையும் சமகண் கொண்டு பார்க்கமுடியாது.

இவர்கள் ஏதோவொரு குழப்பத்தை விளைவித்து நாட்டில் சமாதானத்தை துண்டறுப்பதிலேயே முயற்சி உடையவர்களாக இருப்பர்.

இவர்களின் முயற்சி சமாதானத்தை நோக்கியதாக, மானிடத்தை நேசிப்பதாக அமையுமாயின் நாட்டில் இனப்பிரச்சினை என்ற பேச்சுக்கே இடமிருக்க முடியாது.

இராணுவம் என்பது ஒரு நாடடுக்குரியதே தவிர அது ஓர் இனத்திற்கோ, அன்றி ஓர் சமயத்திற்கோ உரியதல்ல. இந்த உயர்ந்த தத்துவத்தை முப்படையினரும் பொலிஸாரும் உணர்ந்து கொள்ளுகின்ற போதே புரிந்துணர்வு ஏற்பட முடியும்.

இதனைவிடுத்து தமிழ் மக்களின் உணர்வுகளை, அவர்களின் விருப்புகளை எதிர்ப்பது அல்லது அதற்கு தடைவிதிப்பது என்ற நிலைப்பாடு தமிழ்மக்களை மென்மேலும் கிளர்ந்தெழச் செய்யுமேதவிர அது அமைதிக்கும் சாந்திக்கும் வழி கோலமாட்டாது. இதனை படைத்தரப்பு உணர்ந்து கொள்ள வேண்டும்.

தமிழ் மக்கள் தமது தாயகத்தில் சுதந்திரமாக வாழவிரும்புவது அவர்களின் உரிமை. அந்த உரிமையில் கைவைக்கும் உரிமை யாருக்குமே கிடையாது.

ஓர் இனம் இன்னோர் இனத்தை அடக்கி ஆள நினைப்பது எதற்காக? அத்தகை நினைப்புகள் ஏதேனும் உலகவரலாற்றில் நிலைத்திருக்கிறதா- இல்லவேஇல்லை.

இந்த மெய்ப்பொருளை சிங்களதேசம் உணர்ந்து கொண்டு தமிழ் மக்களுக்கு செய்த கொடுமைகளுக்குப் பரிகாரமாக பாவவிமோசனம் பெற்றுக் கொள்ளவேண்டும்.

அந்தபாவ விமோசனம் தமிழர் தாயகத்தை தமிழர்களிடையே ஒப்படைப்பதாகவே இருக்கும்.

மீண்டும் மீண்டும் போர்செய்வதும் மனித உயிர்களை காவுகொள்வதும் ஒரு நல்லஅரசுக்கு அழகல்ல.

எனவே, இனிமேலும் காலம் கடத்தாமல் தமிழர் பிரச்சினைக்கு தீர்வுகாண்தே இந்த நாட்டில் ஏற்பட்டுள்ள குழப்பத்தைஅமைதி நிலைக்கு கொண்டுவருவதற்கான ஒரேவழியாகும்.

## சமாதான முயற்சியில் இருந்து பின்வாங்கும் சிங்களத் தலைமைகளின் தந்திரங்களை சர்வதேசம் விரைவில் புரிந்துகொள்ளும்!

### என்கிறார் சு.ப.தமிழ்ச்செல்வன்

(கிளிநொச்சி)

மாவீரர் நாளை முன்னிட்டு தேசியத்தலைவர் வே.பிரபாகரன் ஆற்றவுள்ள உரையானது நிச்சயமாகத் தீர்க்கமான செய்திகளைக்கொண்டுவரும்.

அந்த உரையானது எங்களுடைய கொள்கைப் பிரகடனமாகவே இருக்கும். தற்போது இடைநிறுத்தப்பட்டுள்ள சமாதான நடவடிக்கையின் எதிர்கால நடவடிக்கைகள் எவ்வாறாக இருக்கும் என்பதையே எடுத்துக்காட்டும் என தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் தனியார் ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய செவ்வியிலேயே அதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் இதுபற்றிக் கருத்துத் தெரிவிக்கையில்,

சர்வதேச சமூகம் எதிர்பார்த்திருக்கும் எமது தலைவரின் உரையானது தமிழர் தரப்பின் ஏக்கங்களை எடுத்துக்கூறும் கொள்கைப் பிரகடனமாகவும் இருக்கும்.

இதேவேளை, பல்வேறுபட்ட தந்திரோபாய யுகதிகளைப் பயன்படுத்தி தென்னிலங்கையில் உள்ள சிங்களத் தலைமைகள் இனப்பிரச்சினைக்கான தீர்வைப் பின்தள்ளி வருகின்றனர்.



எதிர்க்கட்சியின் ஆதரவு இல்லை, பாராளுமன்றத்தில பெரும்பான்மைப் பலம இல்லை அரசியல் யாப்பிற்கு முரணாக எதையும் செய்ய இயலாது போன்ற பலவேறுபட்ட காரணங்களைக்கூறி சந்தர்ப்பத்துக்கு ஏற்றவகையில் சர்வதேச அழுத்தங்களை சிங்களத் தலைமைகள் புறந்தள்ளி வந்திருக்கின்றன.

இத்தகைய சிங்களத் தலைமைகளின் தந்திரங்களைச் சர்வதேச சமூகம் ஒரு கட்டத்தில் புரிந்துகொள்ளும் எனத் தெரிவித்தார். (க-4)

## பாராளுமன்ற நடைமுறைகள் தெரியாவிட்டால் வன்னிக்குச் சென்று படித்துவரலாம்!

### அமைச்சர் அனுரா, மகேஸ்வரன் எம்.பிக்கு அறிவுரை

(கொழும்பு)

மகேஸ்வரன் எம்.பிக்கு பாராளுமன்ற நடைமுறைகள் தெரியாவிட்டால் வன்னிக்குச்சென்று அதுபற்றிப் படித்துக் கொண்டுவரட்டும் என்று கைத்தொழில் முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சர் அனுரா பண்டாரநாயக்க தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை வாய்மூல விடைகளுக்கான கேளவி நேரத்தின்போது தி.மகேஸ்வரன் எம்.பி, கைத்தொழில் முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சர் அனுரா பண்டாரநாயக்கவிடம் கேள்வியொன்றை எழுப்பினார்.

இதற்குப் பதிலளிக்கும் போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார். மகேஸ்வரன் எம்.பியின் கேள்வி சபையில் 15 நிமிடங்கள் கலந்துரையாடலாக மாறியது.

சுற்றுலாத்துறை அமைச்சு அமைந்துள்ள கட்டடத்திலேயே அமைச்சர் டகளஸ் தேவானந்தாவின் அமைச்சும் இருக்கின்றது.

இதனால் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அமைச்சுக்கு வரக்கூடாது என்று கட்டட உரிமையாளர் நீதிமன்றத்தில் தடையுத்தரவு பெற்றுள்ளார்.

இந்த நிலையில் டக்ளஸ் தேவானந்தாவின் அமைச்சுக்கு வாடகை செலுத்துவது யார் என்று மகேஸ்வரன் எம்.பி. கேள்வியொன்றை எழுப்பினார்.

அதற்குப் பதிலளித்த அமைச்சர் அனுரா பண்டாரநாயக்க, மகேஸ்வரன் எம்.பியின் இந்தக் கேள்வி புதுமையாகவும் வேடிக்கையாகவும் இருக்கிறது.

டக்ளஸ் தேவானந்தாவின் அமைச்சு இயங்கும் கட்டடத்திறகு அவரது அமைச்சே வாடகைசெலுத்தும். இதில் என்ன சந்தேகம் எனக் கேட்ட அமைச்சர் அனுரா பண்டாரநாயக்க, மகேஸ்வரன் எம்பிக்கு பாராளுமன்ற நடைமுறை தெரியாவிட்டால் வன்னிக்குச்சென்று அதுபற்றிப் படித்து வரலாம் என்றார்.(க-9)

## பொம்மைவெளி அபிவிருத்திக்கு நிக்கொட் உதவி

## இடர்போக்கும் நடவடிக்கைகள் அடுத்த ஆண்டு தொடக்கம் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

நிக்கொட் நிறுவனத்தின் புனரமைப்புத்திட்டத்தின் கீழ் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினரால் அடுத்த ஆண்டு பொம்மைவெளி கிராமம் புனரமைப்புச் செய்வதற்காகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் கீழ் பொம்பைவெளிப் பகுதியில் பல்வேறு செயற்பாடுகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

இதற்கமைய இப் பகுதியின் வீதிகள் புனரமைப்பு, மின்சார விநியோகம், மலசலகூடங்கள் அமைத்துக் கொடுத்தல், பாலர் பாடசாலை அமைத்தல், நூலகம் அமைத்தல், மயானம் திருத்தல், சுயதொழில் ஊக்குவிப்புத் திட்டம் நடைமுறைப்படுத்தல், விளையாட்டு உபகரணங்கள் வழங்கல, போசாக்கு உணவு வழங்கல் மற்றும் சுகாதார மேம்பாட்டு நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் உட்பட சூழல் அபிவிருத்தி போன்ற செயற்திட்டங்கள் அடுத்த ஆண்டில் நடைமுறைப்படுத்தப்படவுள்ளன.

மேற்படி செயற்றிட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்காக நிக்கொட் நிறுவனத்தினால் 9 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

பல்வேறு பிரச்சினைகளை எதிர்நோக்கிவருகின்ற பொம்மைவெளிப் பிரதேச மக்களுக்கு இச் செயற்றிட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளமை ஓர் வரப்பிரசாதமாக அமையும்.

அத்துடன், இப் பகுதியிலுள்ள மக்கள் மழைகாலங்களில் எதிர்நோக்கும் பெரும்பாலான பிரச்சினைகள் தீர்க்கப்பட்டு அவர்கள் சுமுகமான வாழ்க்கை வாழும் சூழல் இங்கு உருவாக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.(ந-19)

## சாவகச்சேரியில் மாவீரர்களின் பெற்றோர்கள் கௌரவிப்பு

(சாவகச்சேரி)

சாவகச்சேரி மாவீரர்களது பெற்றோர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு கடந்த 21ஆம் திகதி சாவகச்சேரி இந்துக்கல்லூரிக்கு அருகாமை யில உள்ள மாவீரர் பந்தலில் இடம் பெற்றது.

இதில் சர்வதேச தமிழீழ மாணவர் பேரவைப் பொறுப்பாளர் கண்ணன், சாவகச்சேரி மகளிர்துறைப் பொறுப்பாளர் கலைவாணி மற்றும் தேசிய எழுச்சிப் பேரவை துணைச் செயலாளர் அப்புத்துரை ஆகியோர் பொதுச்சுடரினை ஏற்றிவைக்க, தமிழீழத் தேசியக் கொடியினை சாவகச் சேரி பிரதேச அரசியல் பொறுப் பாளர் நிருபன் ஏற்றிவைத்தார். தொடாந்து மாவீரர் கப்டன் மில்லர், அங்கயற்கண்ணி, மாலதி, சங்கர் ஆகியோரது திருவுருவப் படங்களுக்கு சுடரேற்றி அஞ்சலி செலுத்தப்பட்டது.

பின் மாவீரர்களது பெற்றோர் இந்துக்கல்லூரி மாணவர்களது பாட்டு இசையுடன் இந்துக்கல்லூரிக்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

அங்கு தேசிய எழுச்சிப் பேரவை செயலாளர் தலைமையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் மாவீரர்களின் பெற்றோர்கள் கௌரவிக்கப்பட்டனர். (ப-29)

## பரீட்சை வழிகாட்டல் கருத்தரங்கு

(துன்னாலை)

தும்பளை நாவலர் விளையாடுக கழகத்தினால் நடாத்தப்படும் க. பொ.த. (சா/த) பரீட்சார்த்திகளுக்கான இலவச பரீட்சை வழிகாட்டல் கருத்தரங்குகள் எதிர்வரும் 4 ஆம்திகதி பி.ப 2.30 மணிகரும் 5 ஆம் திகதி பி.ப 3.30 மணிக்கும துன்பளை சிவப்பிரகாச மகா வித்தியாலயத்தில் ஆரம்பமாகவுள்ளன.

மேற்படி விளையாட்டுக்கழகம தொடர்ச்சியாக 10 வருடங்களாக நடாத்திவரும் இலவச பரீட்சை வழிகாட்டல் கருத்தரங்கில் இம்முறை, தமிழ் மொழியும் இலக்கியமும், கணிதம், ஆங்கிலம், விஞ்ஞானம், சமூகக்கல்வியும் வரலாறும் மற்றும் வர்த்தகமும் கணக்கியலும் ஆகிய பாடங்களுக்கான கருத்துரைகள் அனுபவம்வாய்ந்த கருத்துரையாளர்களால் வழங்கப்படவுள்ளன. (ந-101)

## தினசரி தியானம்

### விவேகச் சிந்தனைகள்

சுகபோகம் தான் வாழ்க்கையின் குறிக்கோளா? அப்படியானால் மனிதனாக இருப்பதே பெரிய தவறு. நாயையோ, பூனையையோவிட அதிக உற்சாகத்துடன் சுவைத்து உண்ண மனிதனால் முடியுமா? மனிதனாக இருப்பது எவ்வளவு பெரிய தவறு? காலங்காலமாக நான் போராடியதெல்லாம் இப்படிப் புலனின்பங்களில் உழல்கின்ற ஒரு மனிதன் ஆவதற்குத்தான் என்றால் என் வாழ்க்கை வீணே.

சுவாமி விவேகானந்தர்

## இராணுவ...

தமிழீழப் பகுதிகளில் போர் நிறுத்தக்கண் காணிப்புக்குழு பாதுகாப்புடன் இயங்க தமிழர் தரப்பிலிருந்து உறுதியளிக்கப்படும் என்றும், உரிய பதிலை எதிர்பார்ப்பதாகவும் அக்கடிதத்தில் தமிழ்ச்செல்வன் தெரிவித்துள்ளார். மாவீரர் நாள் நிகழ்வுகளைத் திட்டமிட்டுச் சீர்குலைக்கும் நோக்கத்திலேயே தமிழ்மக்கள் மீது தாக்குதலை நடத்தி சீண்டிவருகிறது என்று தமிழ்ச்செல்வன் அந்தக் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார். (த-4)

## புலிப்போராளி...

சாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த இவர், மேலதிக சிகிச்சைக்காக கல்முனை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த போது அங்கு மரணமானார். அக்கரைப்பற்றுப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ச)







## மரதன் ஓட்டம்

(யாழ்ப்பாணம்)

தமிழீழத் தேசியத் தலைவர் வே.பிரபாகரனின் 50 ஆவது பிறந்ததினத்தை முன்னிட்டு இன்று காலை 9 மணிக்கு நல்லூர் தியாகி திலீபனின் நினைவுத்தூபி முன்றலிலிருந்து வல்வெட்டித்துறை ஆதிகோவிலடிக்கு மரதன் ஓட்டம் நடைபெறவுள்ளது.(த)

## தமிழ்க்...

பினர் ஒருவர் உட்பட பொதுமக்கள் மீது தாக்கப்பட்ட சம்பவத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்தே இப் போராட்டம் இடம்பெற்றுள்ளது.

தொடர்ச்சியாக இடம்பெறும் தாக்குதல் சம்பவங்கள் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும். பாதுகாப்பு அமைச்சரும் பிரதியமைச்சரும் இப் பிரச்சினைகளுக்கு உரிய பதில் வழங்கவேண்டும். நடந்து முடிந்த சம்பவங்களுக்காக பக்கச்சார்பற்ற குழுவொன்றை அமைத்து விசாரணை நடாத்த வேண்டும். முக்கியமான தளபதிகளோடு பிரதிப் பாதுகாப்பு அமைச்சரும் கூட்டமைப்புடன் சந்திப்புக்கு ஏற்பாடு செய்துதரவேண்டும் எனக் கோரிக்கை விடுத்தார்கள்.

இதனையடுத்து சபாநாயகரின் அலுவலகத்துக்குள் ஒரு மணிநேரம்வரை கூட்டமைப்பினர் கலந்துரையாடினர்.

ஒன்றரை மணித்தியாலங்களுக்குப் பின்னர் மீண்டும் சபை கூடியபோது அரச தரப்பினால் அமைச்சர் ஜெயராஜ் பெர்ணான்டோபிள்ளே இவ்விடயம் குறித்து விசேட உரை ஒன்றை நிகழ்த்தினார்.

அதில் மன்னாரில் இடம்பெற்ற சம்பவத்தில் 7 பேர் காயமடைந்ததாகவும், அதில் மூவர் விடுதலைப் புலிகள் என்றும் ஏனையோர் கொடியேற்றுவதற்கு எதிர்ப்புத் தெரிவித்தவர்கள் என்றும் தெரிவித்தார்.

இதனையடுத்து அமைச்சரின் உரை குறித்து தமிழ்த் தேசிய கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்கள் எதிர்ப்புத் தெரிவித்தனர். சபை நடவடிக்கைகளை கட்டுப்படுத்த முடியாததன் காரணமாக சபாநாயகர் நாளை வரை சபையை ஒத்திவைத்தார். (ச-04)

## சமாதான...

யில் சிறந்த ஒரு பதில் கிடைக்குமென எதிர்பார்க்கின்றோம.

அரசாங்கத்தின் வரவு - செலவுத் திட்டம் தொடர்பில் அவர் கருத்துத் தெரிவிக்கும்போது அரச ஊழியர்களுக்கு ஒன்பது மணி நேரப்பணி என்பது கட்டாயமானதல்ல என்றார். (ச-04)

## மாவீரர்தின நிகழ்வுகளில்...

நேற்று மன்னார் பஸ் நிலையத்தில் அமைக்கப்பட்ட மாவீரர்தின நினைவுப்பந்தல அருகே புலிக்கொடி ஏற்றப்பட்டபோது அப் பகுதியைச் சுற்றிவளைத்திருந்த படையினர் அதனைத் தடுத்தனர்.

அதன்போது மக்கள் எதிர்ப்புத் தெரிவித்தபோது பொதுமக்கள் மீது இராணுவத்தினர் குண்டாந்தடியடிப் பிரயோகம் நடத்தினர்.

புலிக்கொடியை ஏற்றவிடாது படையினர் தடுத்தபோது அவர்களின் மீதும் பொலிஸாரின் மீதும் அங்கு கூடியிருந்த மக்கள் கல்வீச்சுத் தாக்குதல் நடத்தினர்.

இதனையடுத்து படையினர் குண்டாந்தடியடி பிரயோகம் நடாத்தி கூட்டத்தைக் கலைக்க முற்பட்டனர். இதனால் அங்கு பெரும் களேபரம் வெடித்தது. இக்களேபரத்தில் பொதுமக்கள் தரப்பிலும் படையினர் தரப்பிலும் காயமடைந்தனர்.

படையினரால் தாக்கப்பட்டவர்களை அங்கிருந்து அப்புறப்படுத்த முற்பட்ட மதகுரு ஒருவரையும் தன்னையும் படையினர் தாக்கியதாக வன்னிப் பாராளுமன்ற உறுப்பினர் வினோ நோகராதலிங்கம் தெரிவித்தார்.

இச் சம்பவத்தைத் தொடர்ந்து இராணுவ வாகனம் ஒன்றும், சிறைச்சாலை திணைக்கள வாகனமொன்றும் மக்களின் தாக்குதலுக்கு இலக்காகி சேதமடைந்ததாக மன்னார் பொலிஸார் தெரிவித்தனர்.

### வவுனியாவில்...

வவுனியா வேப்பங்குளத்தில் மாவீரர்தின நிகழ்வுகள் நடைபெற்றுக்கொண்டிருந்த இடத்திற்குச் சென்ற இராணுவத்தினர் சுட்டதில் பொதுமக்கள் நால்வர் படுகாயமடைந்தனர். காயமடைந்தவர்கள் வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

நேற்றுக்காலை நடைபெற்ற மாவீரர்தின நிகழ்வில் புலிக்கொடி ஏற்றியபோது அதனைப் பொலிஸார் தடுக்கமுற்பட்டனர். இதனால் பொலிஸாருக்கும் பொதுமக்களுக்குமிடையியே முறுகல்நிலை ஏற்பட்டது. இதன் தொடர்ச்சியாகப் பொதுமக்கள் வீதிகளில் ரயர் போட்டு எரித்ததுடன் பொலிஸாருக்கு எதிராக ஆர்ப்பாட்டத்திலும் ஈடுபட்டனர.

இதனால் இராணுவம் பொலிஸ் மற்றும் பொதுமக்களுக்கிடையில் போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவினர் சமரசமுயற்சியில் ஈடுபட்டனர். இதனையடுத்து நிலைமை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டு சுமுகமான நிலையில் நிகழ்வுகள் நடைபெற்றன.

பிற்பகல் 5.30 மணியளவில் பவள் வாகனங்கள் சகிதம் அங்கு சென்று படையினர் மாவீரர்தின நிகழ்வில் கலந்துகொண்டிருந்த பொதுமக்கள் மீது திடீரென துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர். இதில் நான்கு பேர்காயமடைந்தனர்.

காயமடைந்தவர்கள் வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

### பருத்தித்துறையில்...

பருத்தித்துறை பஸ் நிலையத்தில் நேற்று நடைபெற்ற மாவீரர் நாள் நிகழ்வின் போது புலிக்கொடி ஏற்றுவதற்கு இராணுவத்தினம் தடை விதித்தனர். இதனையடுத்து அங்கு பதற்ற நிலை உருவானது.

நிலைமை கட்டுமீறிச் சென்றதையடுத்து உடனடியாக இராணுவத்துடன் பேச்சுவார்த்தை நடத்திய நாடாளுமன்ற உறுப்பினர் என்.கே. சிவாஜிலிங்கம் நிலைமையை சுமுகமாக்கினர். (ச-04)

## நாளை...

மணிக்கு அக வணக்கம் செலுத்தப்படும்.

இதன்போது தமிழர் தாயக பிரதேசத்தைச் சேர்ந்த மக்கள் தமது செயற்பாடுகளை நிறுத்தி எழுந்து நின்று அக வணக்கம் செலுத்துமாறு கேட்கப்பட்டுள்ளது.

6.07 மணிக்கு துயிலும் இல்லங்களில் பொதுச் சுடர் ஏற்றப்படும். அதைத் தொடர்ந்து மாவீரர்களுக்கான நினைவுச்சுடர் ஏற்றப்படும். அதனைத் தொடர்ந்து அஞ்சலி நிகழ்வு இடம்பெறும். இதேவேளை வன்னியில் உள்ள மாவீரர் துயிலும் இல்லங்களில் வித்துடல்கள் விதைக்கப்பட்ட மாவீரர்களின் பெற்றோர்கள் நாளை காலை நல்லூர், நெல்லியடி மகா வித்தியாலயம், கொடிகாமம் திருநாவுக்கரசு வித்தியாலயம் ஆகியவற்றிலிருந்து அழைத்துச் செல்லப்படவுள்ளனர்.

இதேவேளை நாளை கௌரவிக்கப்படும் மாவீரர்களின் பெற்றோர்களுக்கு அழைப்பிதழ்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. அழைப்பிதழ்கள் கிடைக்கப்பெறாத மாவீரர்களின் பெற்றோர்களிடத்தில் அதற்காக சிரந்தாழ்த்தி வருந்துகின்றோம். அதனை மனங்கொண்டு ஏற்று அருகில உள்ள அரசியல்துறை அலுவலகங்களுடன் தொடர்புகொண்டு மாவீரர் பெற்றோர் கௌரவிப்பு நிகழ்வில் கலந்துகொள்ளுமாறு யாழ். மாவட்ட அரசியல்துறை பொறுப்பாளர் சி.இளம்பரிதி வேண்டுகோள் விடுத்துள்ளார். (ச)







இப் பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 26.11.2004 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.